# மிஷனெரியின் வாழ்க்கையும் மற்றும் அதிசயமான காரியங்களும்

# வில்லியம் கேரி




ஆக்கம் : பெர்ஷி ஜோன்ஸ் எழுத்து திருத்தம்: ஸ்டீபன் ராஸ்.

மிஷனெரி வாழ்கையும் & அதிசயமான காரியங்களும்

# வில்லியம் கேரி

- ஆக்கம் : பெர்ஷி ஜோன்ஸ். / எழுத்து திருத்தம்: ஸ்டீபன் ராஸ்.

## அத்தியாயம் - 1 - தேவனின் பள்ளி

நமது கதையானது இந்தியாவிற்கு சென்ற மிகச்சிறந்த ஆங்கிலேயர் வில்லியம் கேரியைப் பற்றியது. இன்று (1990 யில்) ஒய்வுநாள் பாடசாலையில் மாணவ மாணவிகள் ஊழியங்களுக்காக பணம் கொடுக்கவும் சேகரிக்கவும் செய்கின்றனர், வில்லியம் கேரி அந்த ஊழியத்தில் மிகமுக்கியமான பங்காற்றியுள்ளார் அதனால் அவரை "இக்கால ஊழியங்களின் தந்தை" என அழைக்கின்றனர். இன்று உலகின் எல்லா பகுதிகளிலும் ஊழியர்கள் இயேசுவை அறிவிக்கும் வேலையை செய்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியாகிய இரட்சிப்பை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகின்றனர், இப்பொழுது இவையெல்லம் எப்படி நடந்தது என்று பார்ப்போம்.

வில்லியம் கேரி நார்த்தாம்டன்ஸயர் என்ற இடத்தில் உள்ள பாளர்ஸ்பெரி என்னும் சிறிய கிராமத்தில் 1761 இல் பிறந்தார், அவரது பிறந்தநாள் 17 ஆகஸ்ட் ஆகும். அவரது இளைய சகோதரி மேரி, அவர் சிறியவனாக இருந்தபொழுது நடந்ததை கூறினார். சிறியவனாக இருந்தபொழுது அவர் ஏராளமான பறவைகளை வைத்திருந்தார், எப்பொழுதும் அவரது அறை முழுவதும் பூச்சிகளை வைத்து அவைகள் எப்படி வளர்கின்றது என்று பார்ப்பார். அவர் எப்பொழுதாவது வெளியில் செல்லும்போது அந்த பறவைகளை மேரியின் பராமரிப்பில் விட்டு செல்வார், சில வேளைகளில் அவற்றை மேரி கருணை கொலை செய்துவிடுவாள், வில்லியம் கேரி தனது இறந்துபோன பறவைகளை பார்த்து மிகவும் வேதனை அடைவார், ஆனால் மேரியின் மன வேதனயை பார்த்து மன்னித்துவிடுவார். மீண்டும் அவரது

பராமரிப்பிலேயே விட்டுவிடுவார், அவர் சேகரிக்கவோ அல்லது காட்டு பூக்களை பறிக்கவோ வெளியே செல்லும்போது மேரியை தன்னுடன் அழைத்துச் செல்வார். அவளை சேறு நிறைந்த பாதைகளில் பத்திரமாய் அழைத்துசென்று சில செடி மற்றும் பூச்சிகளை எடுத்துவருவார், அவர் ஒருபோதும் நடை பயிற்சி செல்லவில்லை, இளம் வயதிலும் சாலை ஓரங்களில் புதர் வேலிகளை கவனிக்காமலே செல்வார், தனக்கு பூக்களின் மீது இருந்த விருப்பத்தால் தனது தகப்பனுடைய தோட்டத்தில் எந்த இடத்தையும் விளைச்சல் இல்லாமல் விட்டதில்லை.

கேரி தகுந்த வளர்ச்சி அடைந்தவுடன் கிராமத்து பள்ளிக்கு சென்றார், அவரது தந்தை பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்ததால் மற்ற மணவர்களை விட அதிகம் படித்தார். நீங்கள் செல்லும் பள்ளியைவிட அப்பள்ளி சற்று வித்தியாசமானது, இருக்கைகளை இழைக்கப்பட்ட இரு சிறிய மரக்கட்டைகளால் செய்திருந்தனர், அதன் கால் பகுதி அதைபோன்றே கடினமானதாக இருந்தது, கேரி தான் சேகரித்த பூக்கள் மற்றும் பூச்சிகளின் உருவங்களை ஓவியமாக வரைவார், அவற்றிற்க்கு வர்ண்னம் தீட்டுவார். ஆனால் எல்லா பாடங்களையும் விட எண் கணித பாடத்தை அதிகம் விரும்பினார், இரவு நேரங்களில் அனைவரும் படுத்த பின்பு கேரி பல எண்களை கூட்டி கணக்கிடுவதை அவரது தாயார் கேட்ப்பார். வாசிப்பதும் அவரது விருப்பமாக இருந்தது, குறிப்பாக அறிவியல், வரலாறு, சாகச காரியங்களை விரும்பி வாசிப்பார். பிற்காலங்களில் டாக்டர். கூக் அவர்களின் சாகாசம் நிறைந்த காரியஙகளே கேரி மிஷனெரி பணிக்குச் செல்லும் எண்ணத்தை கொடுத்தது.

கேரி விளையாட்டிலும் ஆர்வமுடையவராய் இருந்தார், மற்ற மாணவர்கள் விரும்பக்கூடிய விளையாட்டு வீரராக திகழ்ந்தார், அவர் தனக்குள் சவால்களை சந்திக்கும் எண்ணம் உடையவராக இருந்ததே அதற்கு காரணம். எப்பொழுது ஒரு காரியத்தை துவங்கினாலும் அதை முடிக்கும்வரை விடாமுயற்சி உடையவராக இருந்தார், எப்பொழுதும் கடினமான மரங்களில் ஏறுவார், ஒருமுறை பறவை கூட்டை

எடுப்பதற்காக மரத்தில் ஏறி கீழே விழுந்து மிகவும் மோசமான பாதிப்பு தரும் காயத்தை பெற்றார், ஆனால் உடல் நலம் பெற்ற உடன் மீண்டும் அதே மரத்தில் ஏறினார்.

இவை எல்லாவற்றிலும் கேரி தேவனின் பாடசாலையில் இருந்தார் என்பதை காண்கிறோம். பறவைகள் பூக்களின் மீது கேரிக்கு இருந்த அன்பினால் அவரது இருதயம் கலங்கமற்றதாக தேவன் வைத்திருந்தார், வாழ்வில் கடினமான காரியங்களை பொறுமை மற்றும் தைரியத்தினால் மேற்கொள்ள கர்த்தர் கற்றுக்கொடுத்தார் இப்படி அவரை அவரது வாழ்வின் மிகப்பெரிய வேலைக்கு ஆயத்தப்படுத்தினார், அப்பொழுது கேரி இந்த காரியங்களை அறிந்திருக்கவில்லை ஆனால் தேவன் அறிந்திருந்தார். அந்த பிராயத்தில் கேரி கடவுளை சிறிதளவுவே அறிந்திருந்தார். சிறுவயதிலிருந்தே வேதத்தை படித்திருந்தார் “மோட்ச பிரயாணம்” என்ற புஸ்தகத்தை அதன் சவால் நிறைந்த காரியங்களுக்காக அதிகம் விரும்பினார், ஆனால் அவரது இருதயத்தையும், வழ்க்கையையும் தேவன் விரும்புகிறார் என்பதை அறியாதிருந்தார்.

வேறொருவனும் கேரியின் வாழ்வை விரும்பினான் அவன்தான் சாத்தான். சில நேரங்களில் தன் தந்தைக்கு கீழ்படியாமல் தீய நண்பர்களான பொய்சொல்லுபவர்கள், வாக்குவாதத்தில் ஈடுபடுபவர்களுடன் இணைந்துகொண்டார். அவர்கள் மணி அடிப்பவர்கள், கால்பந்தாட்டகாரர்கள், கொல்லப்பட்டறையில் இருப்பவர்களாக இருந்தனர்.

கேரி பள்ளியிலிருந்து வெளியேறியதும் தோள் வியாதியினால் வேதனைப்பட்டார், பகலில் அதிக நேரம் வெயிலில் இருந்ததால் இரவில் அதிக வேதனையை அடைவார். இது அவரை வயல்வெளியில் வேலை செய்ய முடியாதவராக்கியது, அதனால் செருப்பு செய்யும் பயிற்சி பணிக்கு செல்லவேண்டியதாயிற்று.

ஆனால் பின்நாட்களில் பல ஆண்டுகள் இந்தியாவின் வெயிலை தாக்குபிடித்த ஒருவரால் இங்கிலாந்தின் வெயிலை தாக்குபிடிக்க முடியாமல் இருந்தது வேடிக்கையான விஷயமே! ஆனால் இதில் தேவனின் கரத்தைப் பார்க்கிறோம். தான் வயல் வெளியில் வேலை செய்தபோது படிக்க முடியாததை செருப்பு தைக்கும் வேலை செய்தபோது அதிகம் படித்தார். செருப்பு தைப்பவர்களும், நெசவு தொழில் செய்பவர்களும் பெரும்பாலும் சிறந்த சிந்தனையாளர்களாக இருந்திருக்கின்றனர். வெயிலின் தாக்கத்தால் ஏற்பட்ட தோல் வியாதி அவரது வேலைகளுக்கு தடையாக இருந்தது, ஆனால் கர்த்தர் சுகமாக்கினார்.

திரு.ஓல்ட் என்ற எஜமானனுக்கு கேரி ஒரு நல்ல வேலையாளாக இருந்தார், அவர் தனது கடையில் கேரி செய்திருந்த ஒரு ஜோடி செருப்பை நல்ல செருப்பு எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு மாதிரியாக வைத்திருந்தார்.

இந்நாட்களில் கேரி இங்கிலாந்தின் திருச்சபைக்கு செல்வது வழக்கம். அங்குள்ள சிற்றாலய மக்களை வெறுத்தார் அவர்கள் மாற்று கருத்துடையவர்கள் என்று அறியப்பட்டவர்கள். ஆனால் அவரது தந்தை இவர்களுக்கு எதிராக எதையும் பேச கேரியை அனுமதிக்கவில்லை ஏனெனில் அவர் எல்லா மனிதர்களையும் சமமாக மதிக்க வேண்டும் என்பதை அவர் விரும்பினார்.

திரு.ஓல்ட் அவர்களது கடையில் மற்றொருவர் பணியில் இருந்தார் அவர் இந்த மாற்று கருத்து பிரிவை சேர்ந்தவர். அவர் கேரியிடம் வாஞ்சையோடு மனமாற்றத்தைக் குறித்து பேசுவார் கேரி வாக்குவாதம் செய்து வழக்கமாக வார்த்தைகளில் வெற்றி பெறுவார், ஆனால் பின்பு தனிமையில் இருக்கும்போது தான் சொன்னவை சரியானதுதானா என சந்தேகிப்பது வழக்கம்.

இந்த காலக்கட்டதில் கேரி ஒரு விரும்பத்தகாத தவறினால் குற்ற உணர்வடைந்தார், கிறிஸ்துமஸ் நாட்களில் கிறிஸ்துமஸ் பரிசு

பெட்டிகளை சேகரிக்கச் சென்றார். உலோகத் தொழிலாளி (கருவிகள் மற்றும் உலோகப் பொருட்களை பொரும்பாலும் உபயோகிப்பவர்) அவரிடம் ஆறு பென்ஸ் அல்லது சில்லிங்ஸ் வேண்டுமா? என கேட்டார், கேரி சில்லிங்ஸ் பெற்றுக்கொண்டார், பின்பதாக அதனை வைத்து பொருள் வாங்கியபோது அது ஒரு பித்தளை என்பதை அறிந்தார், அந்த நேரத்தில் ரசீதுக்கு தனது எஜமானின் சில்லிங்ஸ் பணத்தைக் கொடுத்தார், தனது கணக்கினைப் பார்த்தபோது அதில் அந்த பொருள் வாங்குவதில் சில சில்லிங்ஸ் குறைந்திருப்பதை கண்டு மிகவும் பயந்தார், இப்பொழுது தனது எஜமானின் பணம் தன்னுடையது என்று கூறுவதற்காக பித்தளை சில்லிங்கை சேர்த்துவிட்டார். வயல்வெளியில் தனது வீட்டிற்க்கு செல்லும்போது "தேவனே என்னை இந்த பிரச்சனையில் இருந்து வெளிவர உதவிசெய்தால் பிற்காலத்தில் எனது அனைத்து தீய காரியங்களையும் விட்டுவிடுகிறேன் என பிரார்த்தனை செய்தார். ஆனால் வேறு வழியே இல்லாமல் கேரி இந்த பொய் மற்றும் திருட்டினை செய்தார்.

கேரியைப்போல் பாவத்திற்கு உதவும்படி அநேகர் ஜெபித்திருக்கின்றனர், ஆனால் இளம் கேரி விரும்பும்படி பதில் கொடுக்க இந்த நல்ல அணுகுமுறை தேவனுக்கு அதிகபட்சமானதாக கருதினார். வெட்கமும், தண்டனையுமே பெரியகாரியங்கள் என்று நாம் நினைக்கின்றோம் ஆனால் தேவனுக்கு பாவத்தினால் வரும் குற்ற உணர்வே அவற்றைவிட பெரியதாகும். இந்த சூழலில்தான் கேரியை இரட்சிப்பதற்க்கு தேவன் சித்தம்கொண்டார்., ஆனால் உண்மை வெளி வந்தது, இந்த விஷயத்தை கண்டுபிடிக்க எஜமான் மற்றொரு பணியாளரை அனுப்பினார், உலோகத் தொழிலாளி பித்தளை சில்லிங் கொடுத்ததை ஒப்புக்கொண்டார், வில்லியம் கேரி வெட்கத்தால் தலை குனிந்தார், எல்லோரும் அவனை திருடனாக பார்ப்பார்கள் என்பதை நினைத்து ஆலயம் செல்லவில்லை. கடைசியில் அவரது எஜமான் இந்த விஷயம் வேறு யாருக்கும் தெரியாது என உறுதியளித்தார். இன்றும்

கூட அதை நாம் அறிய வாய்ப்பில்லை, ஆனால் கேரி தன்னுடைய பின் வருடங்களில் அதை கூறியுள்ளார்.

இந்த பாவமானது அவரது பெலவீனத்தையும் இரட்சிப்பின் அவசியத்தையும் உணரச்செய்தது, அதன்பின்பு அவர் ஏளனமாக நினைத்து ஒதுக்கிய மாற்று கருத்தாளர்களுடன் அவரே சேர்ந்துகொண்டார்.

திரு.ஓல்ட் மரித்தபின்பு அவரது மனைவியின் சகோதரியை கேரி திருமணம் செய்துகொண்டார். அவருக்கு இருபது வயது பூர்த்தியாவதற்குள் வியாபாரத்தை பொறுப்பேற்றுக்கொண்டார், திரு.ஓல்ட் அவர்கள் செய்துகொண்டிருந்த காலணிகளை அதிகபட்சமாக ஆர்டர் செய்தவர்கள் அவற்றை வாங்க முன்வராததால், அதிக நஷ்டத்திற்கு அவற்றை விற்க வேண்டியதாயிற்று அதன் விளைவாக கேரியும் அவரது மனைவியும் அதிக வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஒரு நாள் கேரி சிறிய சபையில் செய்திகொடுக்க அழைக்கப்பட்டார், தாம் மறுப்பு தெரிவிக்க வெட்கப்படுபவராக இருந்ததாலேயே செய்திகொடுக்க அழைக்கப்பட்டார் என பின்பதாக குறிப்பிட்டுள்ளார், ஆனாலும் கேரி நன்றாக செய்திகொடுத்ததால் அந்த சிறிய சபைக்கு அதிகமாக செய்தி கொடுக்க அழைக்கப்பட்டார், அந்த சபையினர் தங்களுக்கு ஒரு ஊழியரை நியமித்து தாங்க முடியாதளவுக்கு ஏழைகளாக இருந்தனர், கேரி செய்தி கொடுப்பதில் சில அனுபவம் பெற்றதும் மோல்டன் பாப்திஸ்ட் சபையின் ஊழியரானார்,

அந்த சபை கேரிக்கு கொடுத்த சம்பளம் கேரி தனது குடும்பத்திற்கு மாதம் ஒருமுறை கூட கறி வாங்க முடியாத அளவுக்குத்தான் இருந்தது, வாழ்வாதாரத்திற்கு வேண்டிய பணத்திற்காக செருப்பு செய்யும் தொழிலை செய்துகொண்டிருந்தார், சிறிய பள்ளியும் வைத்திருந்தார்.

இப்படிபட்ட கடினமான வாழ்விலும் கேரி தான் மற்றவர்களிடம் பெற்றுக்கொண்ட புஸ்தகங்கள் அனைத்தையும் வாசித்துக்கொண்டுதான் இருந்தார். பல அன்னிய மொழிகளையும் கற்றுக்கொண்டிருந்தார், அவர்

எங்கெல்லாம் சென்றாரோ அங்கே சுத்தமான தோட்டத்தை உருவாக்கினார் என்று அவரது சகோதரி மேரி எங்களிடம் கூறியுள்ளார்.

அவரது பள்ளியில் புவியியல் பாடத்தை தானே தோலினால் செய்த உலக உருண்டையை பயன்படுத்தி கற்பிக்கும்போதுதான் உலக நாடுகளில் உள்ள பழங்குடியினர் மற்றும் மக்களுடைய மதரீதியான நிலமைகளை பற்றி அறிந்துகொண்டார், அவரது மிகப்பெரிய பொழுதுபோக்காக மாறும்படியாக அதில் அவருக்கு ஆர்வம் இருந்துகொண்டே இருந்தது. அவர் பெரிய உலக வரைபடம் வரைந்து அதை தொங்கவிட்டு உலக நாடுகளை அதில் குறித்து அந்த நாடுகளைப் பற்றி தான் கற்றுக்கொண்ட அனைத்தையும் குறிப்பாக பதிவு செய்வார்.

ஒரு நாள் நார்தம்டன் என்ற இடத்தில் நடைப்பெற்ற ஊழியர் கூடுகையில், திரு.ரைலண்ட் என்பவர் விவாதிக்கும்படியான தலைப்பை கூறும்படி இளம் ஊழியர்களை கேட்டார், யாரும் எதுவும் சொல்லாமல் இருந்தபோது, காத்திருப்புக்கு பின் கேரி “புற இன மக்களுக்கு நற்செய்தியை அறிவிப்பதில் கிறிஸ்தவர்களின் கடமை” என முன்மொழிந்தார்,

இந்த கருத்து வித்தியாசமாக இருந்ததால் திரு.ரைலண்ட் “உட்காரு இளைஞனே ! கடவுள் புறஇன ஜனங்களை இரட்சிக்க விரும்பும்போது உன்னுடைய மற்றும் என்னுடைய உதவி அவருக்கு தேவைப்படாது” என்றார்

சோர்ந்துபோகாத கேரி தன் வரைபடத்தில் சேகரித்த காரியங்களை கைபிரதியாக எழுதினார். மற்ற ஊழியர்களின் விருப்பத்தையும் பெற்றார், மற்றொரு கூட்டத்தில் தனது சிறந்த செய்தியை பிரசங்கித்தார்.

“தேவனிடதில் இருந்து பெரிய காரியங்களை எதிர்பார்,
தேவனுக்காக பெரியகாரியங்களை செய்”

கடைசியாக 1792 இல், கேட்டரிங்க் என்ற இடத்தில் மிஷினெரி இயக்கம் உருவாக்கப்பட்டது, பெற்ற காணிக்கை £13, 2s. 6d. ஆகும், கேரி முதல் மிஷினெரியாக செல்ல தன்னை அர்ப்பணித்தார்.

## அத்தியாயம் 2 - துவக்க வேலை

புதிய சங்கம் உடனடியாக மிஷினெரிகளை அனுப்புவதற்கு தேவையான ஆயத்தங்களை செய்ய ஆரம்பித்தது. இந்திய தேசம் மிஷினெரி பணியை துவங்குவதற்கு சரியான தேசமாக தெரிந்தெடுக்கப்பட்டது. சுற்றிலும் இருந்த சபைகளில் இருந்து காணிக்கைகள் சேகரிக்கப்பட்டது, பெர்மிங்காமில் இருந்த சாமுவேல் பியர்செஸ் சபையில் இருந்து பெரிய தொகை £70 கொடுக்கப்பட்டது.

இந்த நேரத்தில் ஜான் தாமஸ் என்ற மற்றொரு மனிதர் சங்கத்தின் மூலம் மிஷினெரியாக செல்ல முன்வந்தார், அவர் ஏற்கனவே இந்தியாவிற்கு கப்பல் மருத்துவராக சென்றுள்ளார், அப்பொழுது அங்குள்ள இந்து மக்களுக்கு பிரசங்கித்துள்ளார், இப்பொழுது மருத்துவர் பணியை விட்டுவிட்டு கேரியுடன் இணைந்து இந்தியாவிற்கு மிஷினெரியாக செல்ல விரும்பினார்.

அவர்களது பிரயாணத்திற்கு போதிய பணம் இன்னும் கிடைக்காததால், இன்றைய மிஷினெரிகளை பணம் திரட்ட அனுப்புவது போல், புதிய மிஷினெரிகளையும் தங்களது ஊழியத்தின் தேவைகளை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள அனுப்பப்பட்டனர். தாமஸ் என்பவர் **பிரிஸ்டல்** வரை சென்றார், கேரி வடக்கே சென்றார், அவரது பிரயாணத்தின்போது வில்லியம் வர்ட் என்ற இளம் அச்சு பணியாளரை சந்தித்தார், “வங்காள வேதாகம மொழிபெயர்ப்பில் நீர் அவ்வப்போது வரவேண்டுமென்று விரும்புகின்றோம்” என்றார் கேரி, வார்ட் ஒருபோதும் அதனை மறக்கவில்லை, ஆறு வருடத்திற்க்கு பின்பு அதே பணியை செய்ய அவர் இந்தியா சென்றார்.

கடைசியாக போதுமான அளவு பணம் சேர்த்தவுடன், கேரி மற்றும் தாமஸ்க்கு ஆங்கிலேயர்களின் கப்பலில் இடம் கிடைப்பது அரிதாக இருந்தது, அந்த காலத்தில் கிழக்கிந்திய கம்பெனியினர் இந்தியாவை ஆட்சிசெய்தனர், அந்த கம்பெனியானது இந்தியாவிற்குள் மிஷெனெரிகளை அனுமதிக்க விரும்பவில்லை, அது இந்தியர்களை கோபப்படுத்தி அதனால் அவர்களது வாணிகம் பாதிக்கப்படும் என நினைத்தனர்.

அவர்கள் நம்பிக்கை இழந்துபோகும் நேரத்தில் ஒரு டேனிஸ் கப்பலில் இடம் கிடைத்தது குரோன் பிரின்ஸஸ் மரியா என்ற அந்த கப்பல் டேனிஸ் மற்றும் நார்வே நாட்டுகாரர்களுக்கு சொந்தமானது. கிறிஸ்மஸ் என்ற ஆங்கிலேயர் கேப்டனாக செயல்பட்டார். கப்பலில் பிரயாணம் செய்யும் மற்றவர்களைவிட மிஷெனெரிகள் குறைந்த பணம் கொடுத்திருந்தாலும், மிஷெனெரிகளின் அந்த பிரயாணம் எல்லாவற்றிலும் அவர்களுக்கு வசதியானதாக இருக்க கேப்டன் அவரது அதிகாரத்தை பயன்படுத்தினார்

அந்த மிஷெனெரிகளின் பிரயாணம் டாக்டர். தாமஸ், திரு மற்றும் திருமதி. கேரி, அவர்களது நான்கு பிள்ளைகள் மற்றும் திருமதி கேரியின் சகோதரி ஆகியோரை உள்ளடக்கியது.

கடல் பிரயாணமானது ஐந்து மாதம் நீடித்தது, கேரி தாமஸிடம் பெங்காளி மொழி கற்பதில் **அதிவேகமாக** தனது நேரத்தை செலவழித்தார், வெள்ளை நிற பாய்மரம் கொண்ட அந்த கப்பல் நீல நிற கடலில் ஆடிக்கொண்டே சென்றது அருமையான காட்சியாக இருந்தது, ஆனால் திருமதி. கேரி மற்றும் பிள்ளைகள் நீல கடல், நீல ஆகாயம் மற்றும் போதிய இடவசதியின்மை ஆகியவற்றால் களைப்படைந்தனர், உப்பு கறி, பிஸ்கட் ஆகியவற்றை உண்டு சலிப்படைந்தனர், எல்லாவற்றிற்கும் மேலாக தொடர்ச்சியாக கடல் அலைகளால் கப்பல் அலைவுபட்டது அதிக சோர்வை ஏற்படுத்தியது.

புயல் காற்றினால் ஏற்பட்ட அனுபவத்தை கேரி தனது கடிதத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்:

“கப்பல் கொடூரமாக சாய்வதை பார்த்து உடனே கண்விழித்து நாற்காலி, மேசைகள் உருள்வதையும், கப்பலில் பாதுகாப்பற்ற நிலையில் இருந்த அழகிய குடுவைகள், குவளைகள் அனைத்தும் நொருங்கி விழுவதையும் பார்த்தேன், எழுந்து கப்பலில் நாங்கள் இருந்த அறையை சரிசெய்துவிட்டு மீண்டும் படுக்கைக்கு சென்றேன், உடனே திரு.தாமஸ் கதவு அருகில் வந்து கப்பலின் முன் இருந்த முக்கியமான பாய்மரங்கள் உடைந்து சென்றுவிட்டன என்றார், அனைவரும் விழுந்து எலும்புகள் உடைந்து விடக்கூடாது என்பதால் மனைவி பிள்ளைகளை படுக்கையிலேயே இருக்கும்படி கெஞ்சினேன், கப்பலின் மேல்தளம்

சென்று பார்த்தபோது உண்மையாகவே அதிர்ச்சியான காட்சியாக இருந்தது, இரவில் மலைபோல அலை எழுந்து கப்பலை எல்லா திசைகளிலும் மோதியடித்தது, பாய்மரம், கயிறுகள், துடுப்புகள் எல்லாம் உடைந்து கப்பலின் பக்கவாட்டில் தொங்கி கப்பலில் இடித்துக்கொண்டே இருந்தது, அதை பக்கவாட்டில் இடிக்காமல் இருக்க சிலர் அவற்றை **கழற்றி** விட்டுக்கொண்டிருந்தனர்.

"இதைபோல் ஒன்றை நாங்கள் இதுவரை கண்டதில்லை என்று கப்பலிலிருந்த அனைவரும் ஒருமித்து கூறினர், ஒருமுறை கப்பல் ஆழத்திற்கு சென்றுவிட்டது என்றே முடிவுக்குவந்தோம், எங்கள் கப்பல் அடிபக்கம் 130 அடி நீளம், 600 டன் எடை, ஆனால் அது கடலில் ஐம்பது அல்லது அறுபது அடி உயரத்திற்கு மேல் எழுந்து அங்கிருந்து தலைகீழாக, ஏறத்தாழ செங்குத்தாக வீட்டின் மேல்மாடி போல் விழ ஆரம்பித்தது, நான் அதை பார்த்தேன் மற்றவர்களுடன் சேர்ந்து கப்பல் மீளமுடியாது என தீர்மானித்தேன், ஆனால் தேவசித்தத்திற்கு என்னை ஒப்புக்கொடுத்ததை சிந்தித்தேன், கப்பலின்மேல் தளத்தில் இடித்துக்கொளாமல் இருக்க அருகில் இருந்ததை பிடித்துக்கொண்டேன், ஆனால் நான் பிடித்திருந்தது அச்சுறுத்தலாக இருந்தது, கப்பலின் வில் போன்ற முன்பகுதி கட்டையானது தண்ணீருக்குள் சென்றுவிட்டது, அதோடு இணைக்கபட்டிருந்த பாய்மரமும் அடித்து சென்றுவிட்டது, ஆனால் ஒரு நிமிஷத்தில் கப்பல் முழு பெலத்தோடு மேலெழுந்தது, மேல்மட்டத்தில் இருந்த கடல் தண்ணீரை உள்வாங்காமல் கடலின் மேல்பகுதிக்கு வந்தது"

பலத்த காற்றானது நான்கு நாள் நீடித்தது, கப்பலின் பாய்மர கட்டையை சரிசெய்ய பதினொரு நாள் ஆனது, ஆனால் அதுவும் இரண்டு நாள் கழித்து வந்த சூறாவளி காற்றில் அடித்து செல்லப்பட்டது'.

கடைசியாக ஒருவழியாக இந்தியா வந்தடைந்தனர், இது அவர்களது கடினவாழ்வின் ஆரம்பம்தான் என அறிந்துகொண்டனர், கல்கத்தாவில் வாழ்வாதாரம் என்பது கடினமானது அதனால் சீக்கிரமாகவே அவர்களது பணம் தீர்ந்துவிட்டது, தாமஸ் தனது மருத்துவ பணிக்கு சென்றுவிட்டார், ஆனால் கேரிக்கு வாழ்வாதாரத்துக்கு என்று எதுவும் இல்லை.

அந்நாட்களில் கல்கத்தாவின் தெருக்கள் எல்லாம் வண்ணத் தோரணைகளாக இருந்தது இந்திய ராஜாக்கள் மற்றும் நவாப் ஆகியோர் யானைகளின் மேல் கெம்பீரமாய் சென்றனர், அருமையாக ஒரே மாதிரியாக ஆடை அணிந்த பிரிட்டிஷ் அதிகாரிகளின் அணிவகுப்பு , கரும் சிவப்பு அழகான ஆடை அணிந்த வேலைகாரர்கள் கெம்பீரமான குதிரைகளில் சென்றுகொண்டிருக்க கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகளின் பிரம்மாண்டமான வாகன அணிவகுப்புகளும் நடைபெற்றன. ஆனால் கேரி “ நான் **அந்நிய** தேசத்தில் தனிமையில், கிறிஸ்தவ நண்பர்கள் இல்லாமல், பெரிய குடும்பமாக உதவி செய்ய ஆளில்லாமல் இருக்கிறேன்”. என்று எழுதினார்.

கல்கத்தா அரண்மனைகளின் நகரம் என அழைக்கப்பட்டது, பல ராஜாக்கள் தங்கள் பட்டணத்து வீடுகளை அங்கே வைத்திருந்தனர். கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகள் வெப்பத்தை தணிக்கவும், போதிய அளவு காற்றோட்டத்திற்காகவும் நீண்ட வராண்டா, மற்றும் பெரிய அறைகளுடன் பங்களாக்களைக் கட்டியிருந்தனர். ஆனால் ஒரு இரக்கமுள்ள பணக்காரர் தனது தோட்டத்து வீட்டை கேரிக்கு கொடுக்காமல் இருந்திருந்தால் அவர் வீடு இல்லாதவராகவே இருந்திருப்பார், கேரி அதற்காக நன்றியுள்ளவராக இருந்தார், இருபது ஆண்டுகள் கழித்து கேரியிடம் பணம் இருந்தபோது, அந்த இந்தியர் ஏழ்மை நிலையில் காணப்பட்டார், அப்பொழுது கேரி அவருக்கு அதிக பணத்தை திருப்பி கொடுத்தார், ஆனாலும் அந்த இடம் வாழ்வதற்க்கு வசதியற்ற இடமாகவே இருந்தது.

வியக்கத்தக்க சூரிய ஒளி யானைகளில் போர்த்தப்பட்டிருந்த தங்க துணி, குதிரைகளின் வெள்ளி விலங்குகள், நன்றாக துலக்கப்பட்ட அதிகாரிகளின் பட்டயங்கள் ஆகியவற்றை மின்னச்செய்தது, ஆனால் அதே சூரிய வெளிச்சமானது காற்றோட்டமில்லாத கேரியின் சிறிய வீட்டை இரக்கமின்றி சூடாக்கியது, பகலில் சூடான அடுப்பைப்போலாக்கியது இரவில் அடைக்கப்பட்ட அந்த வீடு தூங்கமுடியாதளவுக்கு மிகவும் சூடானது.

கேரி எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருந்தார், சில உதவிகள் பெற்று ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு அவர் அங்கும் இங்கும்

சென்றுகொண்டிருந்தார், கடின உழைப்பினால் பெங்காளி மொழியை கற்றுக்கொண்டிருந்தார், தனது குடும்பத்தை அன்பாய் கவனித்து வந்தார். ஆனாலும் காரியங்கள் தொடர்ந்து கடினமானதாக மாறிக்கொண்டே இருந்தது, கேரியின் மனைவியும் மற்றும் இரண்டு பிள்ளைகளும் வியாதிப்பட்டார்கள்

கடைசியாக கேரி கல்கத்தாவை விட்டு வெளியேற தீர்மானித்தார், காட்டு பகுதியில் தனக்கென வீடுகட்ட சென்றார். வங்காள மாநில வரைபடத்தில் கங்கை நதியை பார்ப்பீர்களானால் அது ஒரே ஆறாக வங்காள விரிகுடா கடலில் கலக்காமல், நூற்றுகணக்கான சிறிய பிரிவுகளாக பிரிந்து, சேறும், சகதியும், புதர்களும் நிறைந்ததாக கடலில் கலக்கிறது. அது சுந்தர்பன்ட்ஸ் என அழைக்கப்படுகிறது, இன்றும் அங்கு பல ஆண்டுகளுக்கு வாடகையில்லாமல் இலவசமாக நிலம் பெற்றுக்கொள்ளலாம், நிலத்தை மீண்டும் கொடுக்கவேண்டும் என்ற சிக்கல் வரும்போது அந்த காட்டுப்பகுதியை சுத்தம் செய்து உப்புத் தண்ணீர் பகுதியாக விட்டுவிடலாம். கேரி அவரது நாட்களில் இந்த முறையைப் பற்றி கேள்விப்பட்டு பழங்காலத்தில் ஆபிரகாம் “எங்கு செல்கிறோம் என்பது தெரியாமல்” சென்றது போல் கேரியும் குடும்பத்தோடு உடனடியாக படகில் பிரயாணப்பட்டார்

அவர்களுக்கு ஒரு நாள் உணவு மட்டுமே மீதியிருந்தபோது, துப்பாக்கி சுடுதலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒரு ஆங்கிலேயரை சந்தித்தனர், அவர் அரசாங்கத்தின் உப்பளத் துறையின் உதவியாளராக பணியாற்றிய திரு.சார்ட் ஆவார். இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்கள் அன்னியர்களிடம் மிகுந்த அக்கறை காட்டினர் “இந்திய உபசரிப்பு” மற்றவர்களுக்கு நல்ல ஒரு பழமொழியை போன்று எடுத்துக்காட்டாக இருந்தது. ஒரு மிஷெனெரியோ அல்லது ஆங்கிலேயரோ பிரயாணத்தில் மற்றொருவரது வீட்டின் பார்வையில் கூடாரம் அமைத்தால், உடனே அந்த வீட்டின் உரிமையாளர் வெளியே வந்து அவரிடம் “ஏன் இங்கு கூடாரம் அமைத்துள்ளீர்கள்? இங்கே ஒரு வீடு இருப்பது தெரியவில்லையா?” என்று கேட்பார். அங்கு தனிமையில் வசிக்கும் பல ஆங்கிலேயர்கள், டீ தோட்ட உரிமையாளர்கள், மற்றும் பலர் வீட்டின் வெளியே ஒவ்வொருநாளும் மற்றவர்கள் காணும்படியாக ஒரு மேஜை

போட்டு அங்கு நான்குபேர் அமரும்படி நாற்காலியும் அமைத்துவிடுவர், இதனை பார்ப்பவர் நமக்கு அவர் சங்கடத்தை கொடுப்பவர் அல்ல, நமக்காக ஏற்கனவே மேஜை போட்டுவிட்டார் என நினைப்பார். இந்த உபசரிப்பு பாதியளவு அவர்கள் இருதயத்தில் இருந்து வந்தாலும் பாதி அவர்கள் புதிய ஆங்கில முகத்தை பார்த்த மகிழ்ச்சி மற்றும் பேசுவதற்கு மற்றும் ஒருவர் கிடைத்தார் என்ற எண்ணமே காரணம் ஆகும். இப்படிப்பட்ட எண்ணத்தோடுதான் திரு. சார்ட் அவர்கள் கேரியை சந்தித்தார். அவர் ஒரு மதத்தை பின்பற்றுபவர் அல்ல, கேரி ஏன் இந்தியர்களை கிறிஸ்தவர்களாக மாற்ற விரும்புகிறார் என்று அவரால் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆனால் “நீங்கள் சம்பாதிக்க ஆரம்பிக்கும் வரை என் வீட்டில் வந்து ஆறு மாதம் அல்லது அதற்கு மேல் வேண்டுமானாலும் தங்கிக்கொள்ளுங்கள்” என்றார். கேரி உடனே ஊழியத்திற்கு வேண்டிய கூடாரங்களை கட்டத் துவங்கினார். ஆனால் சீக்கிரமாகவே அவர் அதனை முடிப்பதற்கு முன்பாகவே கைவிடவேண்டியதாயிற்று. காரணம், டாக்டர். தாமஸ் என்பவர் இண்டிகோ நிறுவனத்தில் மேலாளராக பணியமர்த்தப்பட்டார், அவர் சீக்கிரமாகவே கேரிக்கும் அப்படிபட்ட பதவியை பெற்று தந்தார். இங்கு மீண்டும் தேவனுடைய கரம் அதிகமாக கேரியை நடத்தினதை பார்க்கின்றோம், இங்கு காய்ச்சல் நிறைந்த சதுப்பு நிலக் காடுகளில் கேரியும் அவரது குடும்பத்தினரும், காய்ச்சலால் மடிந்திருக்க வேண்டும், மிகக்குறைந்த மக்களுக்கே சுவிசேஷம் அறிவிக்க வாய்ப்பு கிடைத்திருக்கும்.

இப்பொழுது ஐந்து வருடங்களாகக் கேரி எந்தப் பணப் பிரச்சனைகளும் இல்லாமல் அவரது வேலையை அமைதியாக செய்துகொண்டிருந்தார், உடனடியாக தனது சொந்த ஊரின் மிஷெனெரி சங்கத்திற்கு இனிமேல் பண உதவிகள் தேவைப்படாது என்றும் ஆனால் சேகரிக்கப்பட்ட பணத்தை அதிகமாக மிஷெனெரிகளை அனுப்புவதற்கு பயன்படுத்துமாறு கூறினார். மேலாளராக அவர் சம்பாதித்த பணத்தில் ஒரு பகுதியை, சில நேரங்களில் மூன்று பகுதியை ஊழியத்திற்க்கென்று கொடுத்துவிடுவார். அவரது பழைய பொழுதுபோக்கை கைவிட்டுவிடவில்லை, புள்ளர் என்பவரிடம் தனது தோட்ட வேலைகளுக்கு வேண்டிய களைக்கொத்தி, அரிவாள், உழவு சக்கரங்கள் மற்றும் ஒரு வருடத்திற்கு

தோட்டங்களுக்கு தேவையான பூ விதைகள், பழ விதைகள், காட்டுமர விதைகள் ஆகியவற்றை பணம் அனுப்பி பெற்றுக்கொண்டார்.

கேரி முறையான திட்டமிடுதலுடன் வேலைசெய்தார், தொழிற்சாலை பணி, வங்க மொழி படித்தல், புதியஏற்பாடு மொழிபெயர்ப்பு, பிரசங்கித்தல் ஆகிய எல்லாவற்றிற்கும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கினார், இதனால் அவர் மாவட்டத்தின் ஒரு முனையிலிருந்து மறு முனை வரைக்கும் ஒரு நாளைக்கு ஒரு முறையாவது பிரசங்க ஊழியத்தை செய்தார், ஞாயிற்றுக் கிழமைகளில் இரண்டு முறை செல்வார்.

## அத்தியாயம் - 3, கேரி இந்தியாவில் கண்டது

கேரி இந்தியாவில் பார்த்த சில வியப்பூட்டும் காரியங்களையும், தனது பணியையும் குறித்து கடிதங்களாக வீட்டிற்கு எழுதினார், கடினமான சில வார்த்தைகளை மாற்றி விட்டு அவரது கடிதத்தின் சில பகுதிகளை குறிப்பிடுகின்றேன், அதற்கு முன்பதாக இந்தியாவைகுறித்து உங்களுக்கு சொல்கிறேன், கேரியின் நாட்களிலும், இன்றும் இந்தியாவில் இந்து மதத்தினரே அதிகமாக வாழ்கின்றனர் (81% 2005 இல்) கிறிஸ்தவம், இஸ்லாம் மதத்திற்கு அடுத்தப்படியாக இந்து மதம் உலகின் மூன்றாவது பெரிய மதமாக உள்ளது. இந்து மதம் பல நம்பிக்கைகளையும் சடங்குகளையும் உள்ளடக்கியுள்ளது, அதன்படி சமுதாயத்தில் ஜாதி பிரிவானது ஒரு மனிதனுடைய சமுதாய பிரிவு, அவனது தொழில் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டது, பிராமண ஜாதியினரை உயர் ஜாதியினராக மதிப்பது, பசு மாட்டை உயர்வாக மதிப்பது, மாமிசம் உண்ணாமை (குறிப்பாக மாட்டு இறைச்சி) மறு ஜென்மத்தில் நம்பிக்கை ஆகிய பல சடங்குகளை கொண்டுள்ளது. இந்துக்கள் பெரும்பாலும் சிவா, விஷ்ணு, தேவியர்கள் (தேவி) ஆகிய கடவுள்களையும் மற்றும் பல சிறிய கடவுள்களையும் வணங்குகின்றனர்.

ஜாதி முறைகளைப் பற்றி கேரி கூறியது :

“சாத்தான் இந்த வலிமையான இரும்பு விலங்கினால்தான் மனிதர்களை கட்டிவைத்துள்ளான், ஆனால் தேவன் அதனை முறித்தெறிவார் என்பதே எனக்கு ஆறுதல்”

அவரது முந்தய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார் :

“இந்திய தேசம் மக்களால் நிறைந்துள்ளது, அவர்கள் கேட்பதற்கு ஆயத்தமாக உள்ளனர். மக்கள் வித்தியாசமான தொழில்கள் செய்வது ஆச்சரியமாக உள்ளது, அதில் அவர்கள் மிகுந்த அக்கறையுடன் உள்ளனர். குறிப்பாக அவர்கள் உற்சாகமாய் அதிகம் பேசுபவர்கள், எங்கு சென்றாலும் அவர்களது விக்கிரக வழிபாட்டுக்குரிய ஏதாவது இருக்கும், குறிப்பாக, பூக்கள், மரங்கள், சாலை ஓர சிறு கோயில் ஆகியவை இடம்பெறும். ஓரிரு மனிதர்கள் முதுகில் தழும்புகளுடன் காணப்பட்டனர். காரணம் அவர்கள் தங்கள் மத சடங்கை நிறைவேற்றுவதற்காக முதுகில் இரும்பு கொக்கி ஒன்றை மாட்டி உயரமாக தொங்குவார்கள். ஆனாலும் அவர்கள் கேட்பவர்கள், எங்கு சென்றாலும் நீங்கள் பேசுவதை கேட்பதற்கு ஒரு கூட்டம் ஆர்வமாக இருக்கும்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமேயாகில், இவை அனைத்தும் உற்சாகப்படுத்தும் சூழலாகவே இருந்தது. அறியாமை மற்றும் சிறுமைப்படுத்த நிலையில் வாழும் மனிதனுக்கு பற்றி எரியும் இயேசுவின் அன்பை கொடுப்பது சாத்தியமே.

அதிக கனிகளைக் கொடுக்கக்கூடிய தேசம், ஆனால் பாதிக்குமேல் நிலங்கள் விளைவிக்கப்படாமல் உள்ளது. இப்பொழுது இங்கிலாந்தில் இங்கு இருக்கும் பல விதமான பழங்கள் அறியப்படாமல் உள்ளது, அன்னாசி பழம் வேலி ஓரங்களில் வளர்கிறது, இது அறுவடையின் காலம் (டிசம்பர் 4ஆம் நாள்) பகலானது இங்கிலாந்தின் ஜுன் மாதத்தை போலும், ஆனால் இரவு செப்டம்பர் மாதம் போல் அதிக குளிராகவும் இருக்கின்றது.

வங்காளம் ஒரு சமவெளியாகும் (முந்தய வடகிழக்கு இந்திய பகுதி) மலை கிடையாது, எங்கேயாவது கற்கள் கிடக்கும். காட்டு விலங்குகள் அதிகம், நரிகள் எல்லா இடத்திலும் இருந்தது, திருமதி. தாமஸ் செல்லமாக ஒரு நாய் வளர்த்தார், அதை அவர் 200 ரூபாய்க்கு (£20) வாங்கியிருந்தார், நாங்கள் ஒரு நாள் மாலை நேர ஜெபக்கூட்டத்திற்கு சென்றிருந்தபோது, திறந்திருந்த எங்கள் வீட்டு கதவு ஓரத்தில் இருந்த அந்த நாயை நரி இழுத்து சென்று விட்டது, ஆனாலும் நரிகள்

ஒருபோதும் மனிதர்களை தாக்குவதில்லை. பாம்புகள் அதிகம், இன்று 6 அடி நீள பாம்பு சட்டை எங்கள் தோட்டத்தின்மேல் கிடந்ததைப் பார்த்தேன். புலிகள் அருகில் கிடையாது. அவை எட்டு அல்லது பத்து மைல்கள் தூரத்தில் உள்ளன. இங்கிலாந்து போல் புலிகளைப்பற்றிய பயம் இல்லை. ஆகமொத்தம் இது ஒரு அருமையான தேசம்".

சுந்தர்பன்ட்ஸ் பகுதிக்கு பிரயாணப்பட்டபோது புலிகளைப்பற்றி வித்தியாசமாக உணர்ந்ததை கேரி எழுதுகிறார் :

"இந்த காடு நூற்றுக்கணக்கான மைல் நீளமுடையது, முழுவதும் மனித குடியிருப்பு இல்லாதது, முழுவதும் புலிகள், சிறுத்தைகள், காண்டா மிருகங்கள், மான்கள், காட்டெருமைகள், மற்றும் பல விலங்குகள் நிறைந்த பகுதி. இரவு நேரங்களில் புலிகளின் உறுமல் சத்தம் கேட்கும் ஆனால் அவை புலிதானா என தெரியாது, படகிலிருந்து நூறு அடி அருகில் இருக்கும் அந்த கடற்கரை பகுதியில் யாரும் தைரியமாக சென்று பார்க்க முடியாது"

**அத்தியாயம் : 4 - கேரியின் அனுபவங்கள்:**

இந்த பகுதியில் கேரியின் பணியைப்பற்றி இன்னும் அறிந்துகொள்ள மேலும் அவர் எழுதிய சில கடிதங்களைப் படிப்போம். ஒரு கடிதத்தில் அவர் இவ்வாறு எழுதுகின்றார்.

"பதினைந்து அல்லது பதினாறு மைல்கள் சூரிய வெளிச்சத்தில் நடந்தது மிகவும் களைப்பாக உள்ளது, ஆனாலும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைப்பதை பற்றி ஆங்கிலம் பேசத் தெரிந்த சில பண பரிமாற்றம் செய்யும் நபர்களிடம் பேசியது மகிழ்ச்சியாக இருக்கிறது."

"அவர்களில் ஒருவர் மிகவும் தந்திரசாலி, மிகவும் கடினமான கேள்விகளால் என்னை மடக்கபார்த்தார், ஆனால் அவர் மடக்கப்பட்டதை உணர்ந்தவுடன் உரையாடலை முடித்துக்கொண்டு தனது பணப்பரிமாற்ற வேலையைப் பார்க்கச் சென்றார்".

மற்றொரு கடிதத்தில் இப்படியாக நாம் படிக்கின்றோம் :

“மத்தியான நேரத்தில் கல்வியின் கடவுளுக்கு காணிக்கைகள் படைக்கப்படுவதைப் பார்த்தேன், அந்த விக்கிரகம் ஒரு கூடாரத்தின் கீழ் வைக்கப்பட்டு, சமைத்த உணவு வகைகள், பழங்கள் இன்னும் பல காணிக்கைகளை மக்கள் படைத்தனர். பிராமன் அனைத்தையும் கிராமமாக படைப்பான். கடைசியில் கொஞ்சத்தை உதவிக்காரக்ளுக்கு கொடுத்துவிட்டு மீதியை பிராமன் தனக்காக எடுத்துக்கொண்டார். இவையெல்லாம் பயங்கர இசை சத்தத்தின் பின்னணியில் நடைபெறும், மறு நாள் அந்த விக்கிரகம் ஆற்றில் வீசப்பட்டது”

இந்தியாவில் விடுமுறை நாள் பற்றி கேரி கூறியது :

வங்காளத்தில் இது ஒரு விடுமுறை நாள், சிலர் கடவுள் கிருஷ்ணன் பூமியில் அவதரித்த பண்டிகையைக் கொண்டாடிவிட்டு மதியான நேரத்தில் தங்கள் தலை முடிகளில் சிவப்பு பொடி பூசி, கதவு முன்பு நின்று ஆடிக்கொண்டு விக்கிரக தந்திர மந்திர செய்கைகளை செய்வர். ஓ.. கிறிஸ்தவர்களைவிட விக்கிரக வணக்கத்தினர் எவ்வளவு வைராக்கியமாக இருக்கிறார்கள்! அந்த கிருஷ்ணர் கோயிலில் பத்தாயிரத்திற்கு அதிகமான பேர் கூடியிருந்தனர் அவர்களில் அதிகமானபேர் இருபது முதல் முப்பது மைல் தூரத்தில் இருந்து வணங்க வந்தவர்கள், இந்த நிலைமைதான் நாட்டின் எல்லா பகுதிகளிலும் நடைபெறுகின்றது. இந்த விடுமுறை நாளில் பணக்காரர்கள் ஒரு லட்சம் ரூபாய் வரை செலவு செய்கின்றனர் (£10,000); அவர்களது வேலையில் இருக்கும் கஷ்டத்தைவிட இந்நாட்களில் அதிக மன அழுத்தத்தை அனுபவிப்பார்கள்”.

மீண்டும் கேரி ஞாயிற்றுக்கிழமையை பற்றி கொண்டிருந்த கருத்தை காணலாம்:

“இது ஒரு ஓய்வுநாளாக அனுசரிக்கப்பட்டது, ஒரு மனமகிழ்ச்சியான நாள். காலையிலும் பிற்பகலிலும் குடும்பத்திற்கு செய்தியை கொடுத்தேன், மாலையில் கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு தேவ வார்த்தையை பிரசங்கித்தேன்.

மொழியை இன்னும் சரியாக கற்றுக்கொள்ளாமல் இருந்தாலும் முன்ஷி என்பவரது உதவியுடன் இருநூறு பேர் முன்பாக இரண்டு

பிராமிணர்களுக்கு கடவுளைப் பற்றி அறிவித்தேன். கட்டைகளால் செய்யப்பட்ட உருவ விக்கிரகம் நிறைந்த கோயிலை பார்க்க சென்றேன், அங்கு புலியின் மேல் பயணித்த விக்கிரகம் இருந்தது, சிறு அம்மை வியாதியை குறிக்கும் தேவதைகளின் விக்கிரகமானது ஒரு தலையில்லா விக்கிரகமாக இருந்தது அது தலையில்லாமல் குதிரைமீது பயணித்திருந்தது, பெரிய காதுகளையுடைய விக்கிரகம் இருந்தது, மற்றும் பல விக்கிரகங்கள் இருந்தது. மற்றொரு அறையில் மென்மையான மரத்தில் செய்யப்பட்டிருந்த சிவனின் விக்கிரகம் இருந்தது.

அதனால் நான் அவர்களிடம் விக்கிரகத்தின் தீமைகளையும், முட்டாள்தனமான பாவமாகிய விக்கிரக ஆராதனையையும் கூறி, உண்மை கடவுளின் தன்மைகளையும், கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பின் வழியையும் அறிவித்தேன்.

ஒரு பிராமிணர் குழப்பமுற்று அமைதியானார், உடனே மற்றவர்கள் ஏன் பதிலளிக்காமல் இருக்கிறீர்கள்? ஏன் பதிலளிக்காமல் இருக்கிறீர்கள்? என்று கூச்சலிட்டனர், அதற்கு அவர் என்னிடம் பதில் வார்த்தை இல்லை என்றார்.

“அந்த நேரத்தில், நன்றாக கற்றறிந்த ஒரு பிராமிணர் என்னோடு பேச வரவழைக்கப்பட்டார், நான் பேசிய பின்பு நான் கூறிய அனைத்தையும் ஏற்றுக்கொள்வதாக கூறிவிட்டு, விக்கிரகங்கள் அனைத்தும் கடைசி நாட்களில் தான் உருவாக்கப்பட்டன துவக்க நாட்களில் அவைகள் இருந்ததில்லை என கூறிவிட்டார்”.

“நான் அவரிடம் ஒரு மனிதன் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் என்று கேட்டேன், “கடவுளின் பெயரை பலமுறை உச்சரிக்க வேண்டும்” என்று கூறினார், நான் கேட்டேன் “உங்கள் மகன் உங்களை வருத்தப்படுத்தக்கூடிய செயலை செய்துவிட்டு உங்களிடம் மன்னிப்பு பெற உங்கள் பெயரை ஆயிரம் முறை கூறிவிட்டால், நீங்கள் மன்னித்து விடுவீர்களா”? இது குழந்தை அல்லது அறிவற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தலாம், ஆனால் உண்மையான கடவுள் அறிவுள்ளவர், என்றேன்”

இந்த கடிதத்தில் கேரி அவரது முதிர்ச்சியற்ற வங்காள மொழி புலமைப்பற்றி கூறுகின்றார், மற்றோரு கடிதத்தில் அவருக்கு இந்த மொழி கடினமானதாக இருந்தாலும், அவரது பிள்ளைகள் எளிதாக கற்றுக்கொண்டு அவர்கள் ஒரு இந்தியர்கள் போன்றே பேசினர் என குறிப்பிடுகின்றார்

இந்துக்களை தவிர மற்றொரு மதத்தினராகிய முகமதியர்களுக்கும் பிரசங்கித்தார் (இஸ்லாம் மதத்தின் நிறுவனர் முகமதுவை பின்பற்றுபவர்கள்) இவர்கள் விக்கிரக வணக்கம் செய்பவர்கள் அல்ல, அவர்களது பிள்ளைகள் ஒரு மனித உருவத்தை வரைவதை கூட அனுமதிக்கமாட்டார்கள், அந்த அளவுக்கு விக்கிரகங்களை வெறுத்தார்கள். அவர்கள் ஒரே கடவுளை நம்பினர் (அல்லா) ஆனால் அவர்கள் அவரை வல்லவராக கண்டனர், அன்புள்ளவராக காணவில்லை.

கேரி தனது ஒரு கடிதத்தில் இவ்வாறு கூறுகின்றார்:

இந்த நாட்களின் கடைசி இரண்டு நாளும் முகமதியர்கள் தங்களது மிகப்பெரிய பண்டிகையைக் கொண்டாடினார்கள். ஊது வாத்தியங்கள், மேளங்கள், மற்றும் பல இசை கருவிகளுடன் இசைத்தனர். இரண்டு பகல் மற்றும் இரவு நடைபெற்று, கடைசி நாளில் வெவ்வேறு வயதுடைய ஆயிரக்கணக்கான மக்கள் எங்கள் கதவின் அருகிலேயே இருந்தனர், வீடானது குளத்தின் கரையின் மேல் கட்டப்பட்டிருந்தது, அதன் அருகில் ஒரு முகமதிய புண்ணியவானின் கல்லறை இருந்தது.

“அவர்கள் எங்கள் முன்பாக தங்களின் முழு  காட்சிகளை காண்பிக்க விரும்பினர். (வான வேடிக்கை, கேளிக்கையான சண்டைகள், மற்றும் பல); அவைகளில் பாதி ஆர்வமிகுதியால் நடந்தாலும், வெள்ளைக்கார பெண் மற்றும் வெள்ளைக்கார ஆண்களை இதற்கு முன் பார்த்திராததால் யார் சாகிப் மற்றும் யார் பிபி சாகிப் என்று எங்களைக் குறித்து விசாரித்தனர்.”

இந்த மனிதர்கள் தங்கள் தோள்களில் வண்ண காகிதங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த நான்கு அல்லது ஐந்து கோபுரம் போன்றவற்றை சுமந்து சென்றனர். ஒரு மூங்கில் அலங்கார விளக்கு இருந்தது.

ஒவ்வொரு கோபுரத்தின் ஒரு பகுதியில் மக்கள் பார்க்கும்படியான ஜன்னல் போன்ற திறப்பு இருந்தது, உண்மையில் அவை வெறுமையாகவே இருந்தது. அதனுள் அந்த பண்டிகைக்கு காரணமானவர்களாகிய முகமதியன் ஹீரோவின் உடல் இருப்பதாக மக்கள் நம்பினர். தங்களது அவ நம்பிக்கையால் அதனுள் பார்க்க முடியாததை ஒருவரும் ஒத்துக்கொள்ள முடியாமல், அதனுள் பார்த்து அழுகையுடன் கவலை தோய்ந்த முகத்துடன் கடந்து சென்றனர். கடைசியில் அந்த கோபுரங்களை குளத்தில் எறிந்து சென்றனர்.

இப்படிப்பட்ட வித்தியாசமான கொண்டாட்டங்களின் மத்தியில் கேரி இந்தியாவில் கொடூரமான எழுதமுடியாத காரியங்களையும் கண்டார். சிறுவர்கள் தேவதைகளுக்கு பலியாக கங்கை நதியில் தூக்கி எறியப்படுவதையும், விதவைகள் மரித்த தங்கள் கணவரின் உடலோடு எரிக்கப்படுவது அல்லது புதைக்கப்படுவது ஆகிய காட்சிகளையும் பார்த்தார்.

கேரி இந்த இரண்டு கொடூரமான சடங்குகளை அதிகம் எதிர்த்து பேசினார். அவைகள் முற்காலத்திலேயே நிறுத்தப்பட்டுவிட்டது, அதனைப் பற்றி விவரங்களை முன்னாள் மிஷினெரிகளின் கடிதங்களின் மூலம் நாம் இப்பொழுது அறிய முடியும்.

**அத்தியாயம் 5 - முதல் மனம் திரும்பியவர்கள்**

கேரி இந்தியாவில் ஆறு ஆண்டுகள் பணியாற்றி, மால்டாவின் ஒரு எல்லையில் இருந்து மறு எல்லை வரைக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்தும், ஒரு புதிய விசுவாசியையும் கேரி உருவாக்கவில்லை. எனவே அவரது உணர்வுகளை கீழ்க்கண்டவாறு விவரிக்கின்றார்.

“ஒரு விவசாயி தனது பயிர்களுக்கு செய்வதை போன்றே உணர்கிறேன்; சில நேரங்களில் விதை முளைப்பதாக எண்ணி நம்பிக்கை பெறுகிறேன், ஆனால் சிறிது நேரத்தில் பயிர் வெடிப்பதுபோல் எனது நம்பிக்கை மேகத்தைப்போல் கலைந்து விடுகிறது. பதர் காணப்பட்டது, முதலாவது கதிர் வந்தது ஆனால் சீக்கிரமாக தீய்ந்து போனது. பதரினால் மூடப்பட்டிருக்கலாம் அல்லது உபத்திரவம் என்னும் வெயிலினால்

தீய்ந்து போயிருக்கலாம். ஆனால் இன்னும் நான் கர்த்தரை நம்பிக்கொண்டிருக்கிறேன்."

இருதயத்தில் சோர்ந்துபோகாமல், மிஷெனெரிகள் தங்கள் பணியைத் தொடர்ந்தனர். கேரி வங்காள மொழியில் புதிய ஏற்பாட்டை அச்சிட £40 க்கு அச்சு இயந்திரத்தை வாங்கினார், இங்கிலாந்து தேசத்திலிருந்து நான்கு புதிய மிஷெனெரிகள் வந்தனர். அவர்களில் மார்ஷ்மேன் மற்றும் வார்ட் ஆகியோரும் வந்திருந்தனர். வார்ட் ஒரு இளம் அச்சாளராக இருந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். கேரி, மார்ஷல், வார்ட் ஆகிய மூவரும் செராம்பூர் மிஷெனெரிகள் என அழைக்கப்பட்டனர்.

மால்டா என்ற இடத்திற்கு செல்வது அவர்களது திட்டம், கேரி அவர்களை வரவேற்க ஆயத்தமாக வீடுகளைக் கட்டியிருந்தார். ஆனால் கிழக்கிந்திய கம்பெனியினர் அவர்களை ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்த இந்திய பகுதிக்குள் அனுமதிக்கவில்லை. ஆனால் டேனிஷ் கவர்னரின் தயவினால், அவர்கள் செராம்பூரில் தங்கவைக்கப்பட்டனர், அவர்கள் இங்கிலாந்திற்கு திருப்பி அனுப்பப்படவேண்டியவர்களாக இருந்தனர். கேரியிடம் சென்று இணைந்து பணி செய்ய முடியாததால், கேரி மால்டாவை விட்டு அவர்களுடன் செராம்பூர் வந்து இணைந்து கொண்டார். அவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருந்த வீடுகளை விட்டு வருவதைக் குறித்து கேரி வருத்தப்பட்டார். அதனால் அவருக்கு £500 இழப்பானது. ஆனால் அவர்களது திட்டம் தடை பண்ணப்பட்டது போல் தோன்றினாலும், தடை ஏற்படுத்தியவர் மூலமாகவே கர்த்தரின் அனந்த ஞானம் செயல்படுவதைப் பார்க்கலாம். செராம்பூர் கல்கத்தா என்னும் பட்டணத்திற்கு அருகில் இருந்ததால், அங்கே செய்யப்படும் அதிகமான வேலைகளை தூரத்தில் இருந்த மால்ட்டா மாவட்டத்தில் இருந்திருந்தால் செய்திருக்கவே முடியாது.

முதல் முறையாகத் தன்னை கிறிஸ்தவர் என்று அறிவித்து, ஞானஸ்நானம் பெற விரும்பியவர் பாக்கீர் என்னும் தொழிலாளி ஆவார். மிஷெனெரிகள் மிகவும் மகிழ்ச்சியுடன் ஆலயத்தில் எழுந்து நின்று உணர்ச்சிபூர்வமாக "எல்லா நன்மைகளின் ஊற்றே உம்மைத் துதிக்கிறோம்" என்ற ஆங்கில பாடலைப் பாடினர். ஒவ்வொருவரும் பாக்கீருக்கு கைகொடுத்து வாழ்த்து தெரிவித்தனர். ஞானஸ்நானம்

பெறுவதற்கு முன்பாக பாக்கீர் பிர்பூம் என்ற ஊரில் இருந்த தனது நண்பர்களிடம் சென்று விடை பெற்று வர விரும்பினார், அவருடைய நண்பர்கள் அவரை மனமடிவாகச் செய்யக்கூடும் என்பதற்காக டாக்டர். தாமஸ் அவருடன் சென்றார். அங்கு சென்றவுடன் பாக்கீர் தன் நண்பனின் இல்லம் சென்று மூன்று நாள்களில் திரும்பிவிடுவதாக வாக்கு கொடுத்தார், ஆனால் அவர் மீண்டும் வரவே இல்லை, அவரைப் பற்றிய எந்த செய்தியும் தெரியவரவில்லை.

அவரது நண்பர்கள் அவருடைய மனதை மாற்ற முயற்சி செய்திருக்கலாம், இந்தியாவில் மீண்டும் மீண்டும் நடந்த காரியங்களை வைத்து பார்க்கும்போது, அவரது நன்பர்கள் அவரை கிறிஸ்தவனாக மாற விடாமல் சிறைப்படுத்தி இருக்கலாம் அல்லது அவர் கிறிஸ்தவனாகுவதை விட கொன்றிருக்கலாம்.

இந்த ஏமாற்றம் மிஷெனெரிகள் மகிழ்ச்சியாக இருக்கும்போது நடந்தது, எனவே துக்கம் அவர்களை மூடியது, ஆனாலும் வேறு ஒரு நபரின் மனம் மாறுதலின் மூலம் மகிழ்ச்சியடைந்தனர். பாகீரை மன மகிழ்ச்சியுடன் திருச்சபையானது வரவேற்றபோது, டாக்டர். தாமஸ் ஒருவருடைய மூட்டு விலகிய கையை சரிசெய்வதற்காக அழைக்கப்பட்டிருந்தார், அந்த நபர் இந்து மதத்தை சேர்ந்த மர வேலை செய்யும் கிருஷ்ண பால் என்பவர் ஆவார். அறுவை சிகிச்சைக்கு பின்பதாக அவரிடம் இயேசுவைப் பற்றி கூறினார், அப்பொழுது அவர் கேள்விப்பட்டது அவரை கண்ணீர் சிந்த வைத்தது.

வார்ட் என்பவரால் எழுதப்பட்ட ஊழிய அறிக்கையில் கிரிஷ்ண பால், அவரது மனைவி, மகள் மற்றும் அவரது சகோதரர் கோகுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட சம்பவம் அருமையாகக் கூறப்பட்டுள்ளது.

“நவம்பர் 27, - கிரிஷ்ணனின் கை சரிசெய்யப்பட்டது பெலிக்ஸ் (கேரியின் மகன்) மற்றும் என்னை வியந்து பார்க்கவைத்தார், அறிவுரைகளை கேட்க தினமும் என் விட்டிற்கு வருவதாக கூறினான். அதனால் அவரது கை சரியானது மட்டுமல்ல, இரட்சிப்பின் செய்தியையும் பெற்றுக் கொண்டார்...

“டிசம்பர் 5,- நேற்று கோகுல் மற்றும் கிரிஷ்ணா எனது அறையில் ஜெபித்தனர். இன்று காலை கோகுல் என்னை அழைத்து அவரது மனைவி மற்றும் அவரது குடும்பத்தை சேர்ந்த இரண்டு அல்லது மூன்று பேர் சுவிஷேசத்தினிமித்தம் பிரிந்து சென்றுவிட்டனர் என்று கூறினார்... கிரிஷ்ணா, அவரது மனைவி மற்றும் குடும்பத்தினர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதில் ஆர்வமுடன் இருந்தனர். கோகுல் மற்றும் அவரது மனைவி நீண்ட நேரம் பேசினர், அவரது மனைவி உறுதியாக இருந்து அவரது சொந்தங்களுடன் இருக்க பிரிந்து சென்று விட்டார்.

“டிசம்பர் 6, - இன்று காலையில் கேரியும் நானும் கிரிஷ்ணாவின் வீட்டிற்கு சென்றோம், எல்லாம் மிகவும் சுத்தமாக இருந்தது, பெண்கள் வீட்டினுள்ளேயும், சிறுவர்கள் கதவின் அருகிலேயும், கிரிஷ்ணா, கோகுல், சகோதரர், கேரியும் நானும் முன் அறையிலும் இருந்தோம். ஏழைகளின் வீடு படுக்க மட்டுமே போதுமானதாகும். கேரி பேசினார், ஒரு பெண் நாங்கள் எதிபார்த்ததைவிட சுவிசேஷத்தை அதிகம் அறிந்திருந்தார். அவர்கள் உடனடியாக தங்களை கிறிஸ்துவுக்கு என்று அறிக்கை செய்தனர், எங்களுக்கும் கேரிக்கும் இந்த பணி புதிதாக இருந்தது. முழு குடும்பமும் சுவிசேஷத்தை கேட்க வாஞ்சையுடன் இருந்து விருப்பத்தை அறிக்கையிட்டனர், கிரிஷ்ணனின் மனைவி மிகப்பெரிய மகிழ்ச்சியைப் பெற்றதாக கூறினார்.

“கர்த்தரின் நாள், டிசம்பர் 7, - சகோதரர் கேரி காலையில் கிரிஷ்ணனின் இல்லம் சென்று வெளிப்பகுதியில் குளிரில் நடுங்கிக்கொண்டே இருந்த அநேகருக்கு பேசினார், அவர்கள் மிகவும் கவனத்துடன் கேட்டனர். கிரிஷ்ணனின் மனைவி மற்றும் சகோதரி மாலையில் எங்களுடன் இருக்கவேண்டியதிருந்தது, ஆனால் பெண்கள் ஐரோப்பியர்களுடன் அமரமாட்டார்கள், அவர்களில் சிலர் பயந்துகொண்டுதான் தண்ணீர் எடுக்கவும், குளிக்கவும் ஆற்றுக்கு செல்வார்கள். அப்போது அவர்கள் ஐரோப்பியரைப் பார்த்தால் ஓடிவிடுவார்கள். சில நேரங்களில் தெருக்களில் நின்று பேசிக்கொண்டிருந்தால், யாராவது எங்களை சற்று விலகி செல்லும்படி கூறுவார்கள் காரணம் பெண்கள் எங்கள் அருகில் வந்து தண்ணீர் எடுப்பதையும் விரும்பமாட்டார்கள், நாங்கள் எப்பொழுதும் அவர்களுக்கு கீழ்ப்படிவோம்...

டிசம்பர் 22 - இந்த நாளில் கோகுல் மற்றும் கிரிஷ்ணன் இருவரும் எங்களுடன் சிற்றுண்டிக்கு உணவருந்த வந்தனர் (இங்கிலாந்தில் இதனை முற்பகல் உணவு என்பார்கள்) இதன் மூலம் அவர்கள் தங்களுடைய ஜாதியை வெளியரங்கமாக தூக்கி எறிந்தனர். எங்கள் பணியாளர்கள் அதிர்ச்சியடைந்தனர். அநேகர் கிறிஸ்துவுக்காக தங்கள் ஜாதியை விட்டுகொடுக்கமாட்டார்கள் என்று கூறினர். சகோதரன் தாமஸ் பதினைந்து ஆண்டுகள் காத்திருந்தார், மக்களுக்காக அநேக தியாகங்களை செய்தவர் ஆனாலும் மக்களால் ஏமாற்றப்பட்டவர். சகோதரன் கேரி தனது நம்பிக்கை முடிவுக்கு வரும் அளவுக்கு காத்திருந்தார், இவை எல்லாவற்றின் மத்தியிலும் கர்த்தர் சரியான நேரத்தில் நேர்த்தியாக செய்து முடித்தார்!. இப்படியாக நம்பிக்கை என்னும் கதவு புற இனத்தவருக்கும் திறந்தது: யார் அதனை அடைக்க முடியும்? ஜாதி என்னும் விலங்கு முறிக்கப்பட்டது, யார் அதனை இணைக்கமுடியும்?"

இரண்டு இந்துக்கள் தங்கள் ஜாதி கட்டுப்பாட்டை மீறிவிட்டார்கள் என்ற செய்தி பட்டணம் முழுவதும் பரவியது, இரண்டாயிரம் பேர் கிருஷ்ணனின் வீட்டின் முன்பாக திரட்டப்பட்டனர். அவரையும் அவரது சகோதரனையும் டேனிஸ் நீதிபதி முன்பதாக இழுத்துச் சென்றனர். அவர்கள் மேல் எந்த குற்றமும் கூறமுடியாததால், நீதிபதி கூட்டத்தை கலைத்து, விசுவாசிகள் வன்முறையால் தாக்கப்படாமல் இருக்க பாதுகாப்பு கொடுத்தார்.

கோகுல் மற்றும் அவரது மனைவி ஞானஸ்நானம் எடுப்பது காலதாமதமானது, ஆனால் கிரிஷ்ண பால் மற்றும் கேரியின் மூத்த மகனும் பின் வந்த ஞாயிற்றுக் கிழமையில் ஆற்றில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர்.

ஆற்றின் கரையில் கவர்னர், அநேக ஐரோப்பியர்கள், போர்ச்சுகீசியர்களின் பெரிய கூட்டமும், இந்து மற்றும் முகமதியர்களின் பெருந்திரள் கூட்டமும் இந்த வித்தியாசமான நிகழ்வை காண திரண்டிருந்தனர். அங்கே நேர்த்தியான அமைதியும், நிறைவான ஒற்றுமையும் காணப்பட்டது, கவர்னர் கண்ணீர் கசிய நின்று

கொண்டிருந்தார். மதியான நேரத்தில் முதல் முறையாக வங்காள மொழியில் திரு விருந்து ஆராதனை நடத்தப்பட்டது..

ஞானஸ்நானம் எடுத்த முதல் பெங்காளி பெண் ஜாய்முனி, கிரிஷ்ணனின் மனைவியின் சகோதரி ஆவார், அதன் பின் ராசு மற்றும் அவரது மனைவி ஞானஸ்நானம் பெற்றனர், அவர்கள் முப்பத்தைந்து வயதுடையவர்களாக இருந்தனர். கோகுல் அவரது மனைவி கோமல் தன் தகப்பன் விட்டிற்கு சென்றதால் திருமுழுக்கு பெறாதப்படி காலதாமதம் செய்யப்பட்டிருந்தார். ஆனால் கிரிஷ்ணன் மற்றும் அவர் குடும்பத்தினர் முதலாவது கணவரை கொண்டு வந்தனர் பின்பு மனைவிகள் வந்தனர்.

இந்த விசுவாசிகள் ஊழியத்தில் அதிக உதவியாக இருந்தனர். உடனடியாக கிரிஷ்ண பால் தனது வீட்டிற்கு முன்பாக ஒரு சிற்றாலயம் கட்டினார். அவரது மனைவி மற்ற இந்து பெண்களிடம் சுவிசேஷத்தை அறிவித்தார்கள்.

கிரிஷ்ண பால் முதல் பெங்காளி மொழி பாமாலை பாடலை எழுதினார். மார்ஸ்மேன் என்பவரால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது

“என் ஆத்துமாவே, உன் கருமங்களை சுமந்த

நண்பரை ஒருபோதும் மறவாதே.

எல்லா விக்கிரகங்களையும் மறந்துவிடு,

ஆனால் என் ஆத்துமாவே அவரை மறவாதே.”

சுவிசேஷத்தினால் இந்து மதத்தின் ஜாதி கட்டுகள் உடைக்கப்பட்டதை பார்த்து ஐரோப்பியர்களும், இந்தியர்களும் நகைத்தனர். கிரிஷ்ணன் மற்றும் கோகுல் அவர்களது ஜாதிகளை விட்டுவிட்டதைப் பார்த்து அநேகர் ஆச்சரியப்பட்டனர். ஆனால் சிலர் “அவர்கள் தாழ்ந்த ஜாதியினர், உயர் ஜாதியினர் யாராவது கிறிஸ்துவை விசுவாசித்தது உண்டா?” என்று கேட்டனர். இந்த கேள்விக்கான பதில் வருவதற்கு கால தாமதமாகவில்லை. அடுத்த ஆண்டே இலக்கிய பண்டிதர் இனத்தை சேர்ந்த ஒருவர் ஞானஸ்நானம் பெற்றார். அடுத்தபடியாக ஒரு பிராமிணர் ஞானஸ்நானம் பெற்றார். உயர் ஜாதியைச் சார்ந்தவர்

மட்டுமல்ல அந்த ஜாதியின் உட்பிரிவிலும் உயர்ந்த ஜாதியாகிய குலின் பிராமிணராவார்.

இதிலிருந்து பணியானது சீராக வளர ஆரம்பித்தது. பத்து வருடங்களில் முந்நூறு பேர் ஞானஸ்நானம் பெற்றிருந்தனர், தொடர்ச்சியாக ஒரு ஆண்டிற்கு நூறு பேர் என்ற வீதத்தில் புதிய ஆத்துமாக்கள் ஞானஸ்நானம் பெற்றனர்.

பதினெட்டு வருடங்களுக்கு முன்பதாக நீங்கள் இதனை எதிர்பார்த்தீர்களா? என்று மார்ஸ்மேன் ஊழிய சங்கத்திற்கு எழுதினார்.

அவர்கள் அப்பொழுது அப்படிப்பட்ட எதிர்பார்ப்பு இல்லாது இருந்திருப்பார்களானால், முதல் மிஷெனெரி இயக்கத்தினர் இப்போது அடைந்திருக்கும் வளர்ச்சியைப் அப்போதே தரிசித்திருப்பது அவர்களுக்கு எவ்வளவாய் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும்.

**அத்தியாயம் 6 - பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்**

கேரி தன்னைப் பற்றி கூறும்போது, தானியம் வளருவதை பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு விவசாயி போல இருப்பதாக கூறுகின்றார், அது உண்மையே. காத்திருந்த ஆண்டுகள் வீணானவை அல்ல. அப்பொழுது விதை விதைக்கப்பட்டது அதன் பின்பு நல்ல அறுவடையைக் கொடுத்தது. இந்த அறுவடையானது 1800 யில் ஆரம்பமானது. அந்த வருடத்தில் தான் முதல் விசுவாசி ஞானஸ்நானம் பெற்றார். அந்த வருடத்தில் தான் கேரி மிகவும் மகிழ்ச்சியுடன் அச்சு இயந்திரத்திலிருந்து பெங்காளி மொழியின் புதிய ஏற்பாட்டின் கடைசி காகிதத்தைப் பெற்றார். இந்த புஸ்தகத்தின் பெரும் பகுதி வார்ட் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது. அவருக்கு பெலிக்ஸ் என்பவர் உதவியாளராக இருந்தார். உங்களுக்கு ஞாபகமிருக்கலாம் அவர் கேரியின் மூத்த மகன் ஆவார்.

முதல் பதிப்பு புஸ்தகமாக உருவாக்கப்பட்ட உடனே அது ஆலயத்தின் திருவிருந்து மேஜையில் வைக்கப்பட்டது, இந்த முக்கியமான பணியை நிறைவு செய்ததற்காக நன்றி சொல்வதற்காக ஊழிய குடும்பங்களாக கூடிவந்தனர்.

புதிய ஏற்பாடு தயாரானவுடன் அதனை இப்பொழுது மக்களுக்கு வாசிக்க கற்று கொடுக்க வேண்டும், மிஷெனெரிகள் அதே வைராக்கியத்துடன் அதனை செயல்படுத்த துவங்கினர், குறுகிய காலத்திலேயே நூற்றுக்கும் அதிகமான  பெங்காளி பள்ளிகளை உருவாக்கினார்கள்.

இந்த ஆச்சரியமான நிகழ்வுகளில் மிகப் விநோதமான பெரிய காரியம் என்னவென்றால், ஊழியத்தின் மிகப்பெரிய எதிரியாக இருந்த கிழக்கிந்திய கம்பெனி அவர்களை அறியாமலே முக்கிய ஆதாரவாளர்களாக ஆனார்கள்.

அதே ஆண்டு 1800 யில், லார்ட். வெள்லெஸ்லி கல்கத்தாவில் போர்ட் வில்லியம் என்ற கல்லூரியை உருவாக்கினார். அரசு பணிக்காக இங்கிலாந்திலிருந்து வரும் இளைஞர்களுக்கு இந்திய மொழியை கற்பிக்க ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் ஒரே ஒரு ஆங்கிலேயர் மட்டுமே பெங்காளி மொழியை கற்றுக்கொடுப்பவராக இருந்தார் அவர் தான் கேரி: ஒரு காலத்தில் கல்கத்தாவில் வேலை செய்யக் கூடாது என ஒதுக்கப்பட்டிருந்த மிஷெனெரி, இப்போது £600 ஒரு வருட சம்பளமாக கொடுத்து கல்கத்தாவில் பணியாற்றும்படி அரசாங்கத்தால் அழைக்கப்பட்டார்.

இந்த காரியம் கேரிக்கு பல வழிகளில் உதவியாக இருந்தது, குறிப்பாக அவரது சம்பளம் £1200 ஆக உயர்த்தப்பட்டபோது அது அவரது செராம்பூர் பணிகளைச் செய்வதற்கு உதவியாக இருந்தது. கல்கத்தாவில் உள்ள இந்தியர் மற்றும் ஐரோப்பியர் மத்தியில் கேரிக்கு நல்ல தாக்கத்தை உண்டாகச்செய்தது. முப்பது வயதினரின் சந்ததியினர் முழுவதும் கேரியின் உத்தரவுக்குள் வந்தனர், அவர்கள் பிற்காலத்தில் இந்தியாவின் மிகப்பெரிய ஆட்சியாளர்கள் ஆனார்கள். அவர்கள் கேரியிடம் இருந்து மொழிப் புலமை மற்றுமல்ல இந்தியர்களை தயவாய் நடத்தவும் செய்தனர். அவர்களில் சிலர் கிறிஸ்துவுக்குள் சகோதரர்களாக மாறினர். இந்த ஆங்கிலேய இளைஞர்கள் சிலர் மூலமாக சில நேரங்களில் கேரி முழு இந்திய அரசாங்கத்தையே மாற்ற முடிந்தது.

போர்ட் வில்லியம் கல்லூரியில் கேரிக்கு இருந்த பதவியால் அவர் வேதாகமத்தை மொழிபெயர்க்கும் மிகப்பெரிய பணியை செய்ய முடிந்தது. அந்த கல்லூரியில் கிழக்கின் ந்தியர்களில் மிகச்சிறந்த ஐம்பது

வல்லுனர்கள் ஒன்று கூடி தினமும் வந்தனர் அவர்களுடன் பணியாற்றியதின் மூலம் கேரி இந்திய மொழிகளை கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இருந்தது, மற்ற எந்த ஆங்கிலேயராலும் இப்படி மொழிகளை அறியமுடியவில்லை. அப்படியாக கேரி இந்தியாவின் முக்கிய மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்க்க முடிந்தது.

பொதுவாக கேரி திங்கள்கிழமை மாலை புறப்பட்டு பெருக்கெடுத்து ஓடும் ஆற்றைக் கடந்து 18 மைல்கள் செராம்பூர் முதல் கல்கத்தா வரை பிரயாணப்பட்டு வெள்ளிக்கிழமை இரவு திரும்பி வருவார். பிரயாணத்தின்போது தனது வேலைகளை செய்வார். இப்படியாக கல்கத்தாவில் நான்கு நாட்களும் செராம்பூரில் மூன்று நாட்களும் இருப்பார். கல்கத்தா கல்லூரியில் பகல் முழுவதும் பணிசெய்துகொண்டிருப்பார், சூரியன் மறையும்போது அவர் மக்களுக்கு பிரசங்கிக்க சென்று, குறிப்பாக ஏழை, ஊமையானவர்கள், சப்பாணிகள், கண்பார்வையற்றவர்கள், குஷ்டரோகிகள் ஆகியோரை சந்திப்பார்.

மிகவும் சந்தோஷத்தோடு கேரி தனது பணிகளை செய்துகொண்டிருந்தபோது (காலை முதல் மாலை வரை இரட்சகருக்காய் அன்பின் பணிசெய்வதில் நேரத்தை செலவழிப்பதைவிட வாழ்கையில் வேறு எதுவும் மகிழ்ச்சி இருக்கமுடியாது) மிகப்பெரிய பேரழிவு ஏற்பட்டது, செராம்பூரில் இருந்த அச்சு அலுவலகம் முற்றிலும் தீ பற்றி எரிந்தது.

ஒரு நாள் மாலையில் எல்லா தொழிலாளிகளும் சென்றுவிட்டனர், வார்ட் மட்டும் தனது பணியை செய்துகொண்டிருந்தார், திடீரென்று தட்டச்சு அறையிலிருந்து புகை எழும்பி அலுவலகத்திற்குள் பரவ ஆரம்பித்தது, மற்றவர்களுடன் இணைந்து வார்ட் அலுவலகத்தின் ஜன்னல் கதவுகளை அடைத்தார், தீயை அணைத்துவிடும் நம்பிக்கையில் அறையின் மேல் கூறையிலிருந்து தண்ணீரை நான்கு மணி நேரம் ஊற்றினர், அந்த வேலையின் முடிவு நேரத்தில் உதவி செய்ய வந்த ஒருவர் அறிவில்லாதவராய் ஜன்னலை திறந்து விட்டார், எனவே காற்று அதிகமாக உட்புகுந்து முழு அலுவலகத்தையுமே எரிய செய்தது, நடு இரவில் மேற் கூரை விழுந்தது, வானத்தை நோக்கி தீ எழுந்தது,

மிஷெனெரி குடும்பத்தின் அங்கத்தினர்கள் அமைதியாக முன் அமர்ந்து எல்லாவற்றையும் பார்க்கத்தான் முடிந்தது.

பத்து வருட வேலை சில மணி நேரத்தில் வீணாகிவிட்டது, பதினான்கு கிழக்கிந்தியாவின் பதிநான்கு மொழிகளின் தட்டச்சு உருகி உலோக கட்டியாக மாறியது, அச்சடிக்கப்பட்டிருந்த வேதாகமத்தின் பத்து மொழிபெயர்ப்பு பதிப்புகள், மற்றும் கேரியின் மொழிபெயர்ப்புகள் அனைத்தும் ஆயிரத்தி இரு நூறு காகித குவியலாக எரிந்திருந்தன.

மறு நாள் காலையில் கேரியிடம் இந்த செய்தியினை சொல்வதற்காக மார்ஸ்மேன் சென்றார், அதனை கேள்விப்பட்டதும் கேரி அதிர்ச்சியில் உறைந்தார், அவரால் சிறிது நேரம் ஒரு வார்த்தைகூட பேசமுடியாமல் இருந்தார்.

மாலை நேரத்தில் புகைமூட்டத்துடன் சேதமடைந்திருந்த இடத்திற்கு மீண்டும் சென்றனர், அங்கு மிகப்பெரிய ஆச்சரியம் காத்திருந்தது, அந்த பகுதியை சுத்தம் செய்துகொண்டிருந்த வார்ட் அதில் சேதமடையாமல் கிடந்த பல துளையிடும் கருவி மற்றும் தட்டச்சுக்கு பயன்படுத்தும் அச்சு உலோகங்களை கண்டெடுத்தார்

கேரி ஒரு நாளையும் வீணாக்காமல் புதிய மொழிபெயர்ப்பு பணியை தொடர்ந்தார். புதிய தட்டச்சு ஆகியவற்றின் பணிகளை துவங்கி, ஒரு மாதத்திற்குள் அச்சு அலுவலகம் புதிய வேத புஸ்தகங்களை உருவாக்கும் பணியில் சுறுசுறுப்புடன் இயங்க வைத்தார். இதன் மூலம், கேரியின் எவ்வளவு திறமை நிறைந்தவர் என்பது நமக்கு நன்கு புரிகின்றது.

பல வருடங்களாக மொழிபெயர்த்து செய்யப்பட்ட புஸ்தகங்களை மீண்டும் உருவாக்குவது என்பது கடினமான காரியமாகும்; ஆனால் கேரி இரண்டாவதாக செய்த பணி மிகவும் சிறப்பானதாக வெளிவந்தது, இந்த அழிவு மற்ற நன்மைகளையும் உண்டாக்கியது, பற்றி எரிந்த தீ கேரியை ஐரோப்பா முழுவதும் பிரபலமாக்கியது, உலகம் முழுவதும் இருந்து ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட தங்களால் இயன்றமட்டும் உதவிகள் செய்தனர். ஏற்பட்ட இழப்பு £10,000 (இந்திய மதிப்பு சுமார் பத்து இலட்சங்களாகும்), ஆகும். ஆனால் அந்த தேவை இங்கிலாந்தில் ஐம்பது

நாட்களில் சந்திக்கப்பட்டது, இந்தியாவின் ஒரு சபையினர் இணைந்து £800 (சுமார் 80,000 ரூபாய்) சேகரித்து கொடுத்தனர்.

செராம்பூர் மிஷெனெரிகளால் முப்பது இந்திய மொழிகளில் உருவாக்கப்பட்ட முதல் பதிப்பு புதிய ஏற்பாட்டை வாசிப்பது நமக்கு எளிதானதாக இருக்கலாம். ஆனால் செராம்பூர் கல்லூரி நூலகத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் புத்தக வரிசையில் இருக்கும் அவர்களது பணிகளை பார்த்தால் ஒரு குறுகிய வாழ்வு காலகட்டத்திற்குள் இவ்வளவு பெரிய பணிகளை செய்திருப்பது நமக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

**அத்தியாயம் 7 - தோட்ட பராமரிப்பு**

கேரி தனது அதிக வேலை பளுவின் மத்தியிலும், தனது பழைய பொழுதுபோக்காகிய தோட்ட பராமரிப்பு வேலைகளுக்கும் நேரம் ஒதுக்கினார். அவரது உடற்பயிற்சி, மனதுக்கு ஓய்வு, மற்றும் தோட்டத்தில் அவரது ஜெபம், தியானம் ஆகியவை அவர் செய்த பெரிய காரியங்களை செய்வதற்கு உதவியாக இருந்தது.

கேரி செராம்பூர் சென்றபோது அங்கு அவருக்கு இரண்டு ஏக்கர் நிலம் இருந்தது அது, ஆடு, மாடுகள் உட்புகாதவாறு கவனமாக சுற்று சுவர் எழுப்பப்பட்டிருந்தது, இந்தியாவில் விலங்குகள் சாலையில் விட்டு விடப்படுகிறது, கண்ணில் அகப்படும் மலர்கள், செடிகளை உட்கொள்கின்றன, ஆகவே அவைகள் தோட்டத்தை விரும்புபவர்களின் எதிரிகளாகின்றன.

அந்த நிலமானது பின்பதாக ஐந்து ஏக்கர் ஆக அதிகரிக்கப்பட்டது. இங்கு கேரி வெப்பமண்டல மரங்களையும், செடிகளையும் சேகரித்து, இந்தியாவின் கிழக்கிலே நேர்த்தியான தாவரவியல் பூங்காவை ஏற்படுத்தினார். செராம்பூரைவிட்டு வெளி உலகிற்குள் சென்ற பள்ளி மாணவர்கள், போர்ட் வில்லியம்ஸ் கல்லூரியில் பயின்றவர்கள், கேரியின் இந்த செயலைப் பார்த்து, அவருக்கு இந்தியாவின் எல்லா பகுதியிலிருந்தும் செடி மற்றும் மரங்களின் மாதிரிகளை அனுப்பினர்.

கேரி ஆங்கில பழங்கள், மலர்கள், காய்கறிகளை அறிமுகம் செய்ய முயற்சித்தார். அவர் எப்பொழுதும் இந்தியாவில் இருந்து விருப்பமான

பொருட்களை தனது இல்லத்திற்கு அனுப்புவார், அதற்கு பதிலாக அவர்களிடம் இருந்து விதைகளை வாங்கிக்கொள்வார், இப்படியாக அவர் தனது சகோதரிக்கு எழுதிய கடிதத்தில்;

“மலர்செடி, இளமஞ்சள் மலர், பனித்துளிமலர், அல்லி மலர், மற்றும் இதர வகை விதைகளையும் அனுப்பவும். செலவு செய்ய வேண்டாம், யாராவது நண்பர்கள் அவற்றை கொடுப்பார்கள். கொவ்சிலிப் மலர்கள், டெய்ஸ்சி மலர்கள் இம்மண்ணிற்கு பொக்கிஷமாகும்”.

மற்றொரு கடிதத்தில்

“ஒரு பையனுக்கு ஒரு நாளைக்கு ஒரு பணம் கொடுத்து கவ்சிலிப்ஸ், ஊதா பூ, டெய்ஸி மலர், காக்கை பூ ஆகியவற்றை சேகரிக்கவும், நீலமணி மலர் விதைகளை தோண்டி எடுக்கவும் செய்யுங்கள். பூ விதைப்புக்கு பின்பு, காலாண்டுக்கு ஒருமுறை எனக்கு ஒரு பெட்டியை அனுப்பவும், கண்டிப்பாக அருகில் இருப்பவர்கள் யாராவது பனித்துளி மலர், குரோகஸ் மற்றும் அற்ப மலர்களை அனுப்புவர்”

தனக்கு ஆங்கில மலர் விதைகளை அனுப்பிய திரு.கூப்பர் என்னும் தோட்ட பராமரிப்பாளருக்கு கேரி கடிதம் எழுதினார்,

“உங்களது மதிப்பு மிகுந்த வெகுமதியில் எதையும் நான் இழக்க விரும்பவில்லை, ஒரு சிறிய நிழல் பகுதியில் உங்கள் சாக்குப் பையை உதறினேன், சில நாட்கள் கழித்து அந்த பகுதியில் சில சிறு செடிகள் முளைத்திருப்பதைப் பார்த்து விவரிக்கமுடியாத அளவுக்கு மகிழ்ச்சியடைந்தேன், அது பொதுவான ஆங்கில மலராகிய டெய்ஸி ஆகும். ஐரோப்பாவை விட்டு வந்ததிலிருந்து இப்படிப்பட்ட மகிழ்ச்சியடைந்திருப்பேனா என்று எனக்கு தெரியாது, இந்த ஆங்கில டெய்ஸி மலரின் காட்சி சிறிய இன்பம் போன்று காட்சியளித்தாலும் அது விவரிக்க முடியாத மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. முப்பது ஆண்டுகளாக பார்த்திராத ஒன்றை இப்போது மீண்டும் பார்ப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை”.

இதனைக் கேள்விப்பட்ட ஜேம்ஸ் மோண்டோகோமெரி என்னும் பாடகர் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்.

ஆங்கில மலரே உனக்கு மும்முறை வரவேற்பு !
என் தாய் நாட்டின் வெண்மையும் சிவப்பே ;
ரோஜாவிலும் அல்லியிலும் இந்த நேரமட்டும்,
இவ்வளவு அழகு என்னில் கலக்கவில்லை:
உனது தீவிலிருந்து எடுக்கப்பட்டு
பூமி என்னும் பொக்கிஷத்தில் நாட்டப்பட்டது
விசித்திரமாக உன் கருவில் இருந்து
என்னில் உயிர்பெற்றது

ஆங்கில மலரே உனக்கு மும்முறை வரவேற்பு!
அத்தியில் பூத்தது என்னால் நாட்டம் பெற்றது
மகிழ்ச்சியாய் தகப்பனின் வில்லிலிருந்து :
நாணத்தின் ஞாபகக் குறியானாய்.
இது குழந்தை பருவ திருவிளையாடல்
இளமையின் பொற்காலம்.
முதிர் பருவத்தின் முளைவிடு காலம்.
இல்லம், நாடு, உறவு, நட்பு
ஆகியவற்றை இங்கிருந்தே பெற்றேன்

ஆங்கில மலரே உனக்கு மும்முறை வரவேற்பு !
காணப்படாத நம்பிக்கையின் உறுதி
கவலை என் மனதால் மேற்கொள்ளப்பட்டு
மகிழ்ச்சி என்றும் இடம் பிடித்தது

எவ்வளவு பச்சையும் மென்மையுமானாய்

என்பதை என் உள்ளம் உணர்கிறது

புழுதியில் இருந்தெழுந்து

அமைதியின் புருவமாய் பரத்தை நோக்குகிறாய்

அது கடவுளில் என் நம்பிக்கையை

பதிக்க வைத்தது .

முதல் முதலாக பெங்காளியில் காணப்படாத உருளைக் கிழங்கு கேரியால் பயிரிடப்பட்டது. அவர் பயிரிட்ட திராட்சை கவர்னருக்கு பரிசளிக்கப்பட்டது. அவரால் நடப்பட்ட ஆங்கில ஓக் மரம் வளராமல் வீணானது, ஆனால் மகோகனி மரங்கள், தைல மரங்கள், புளிய மரங்கள், மற்ற மரங்களும் வளர்ந்தன.

பெங்காளி பழங்கள், புளிப்பாகவும் மோசமானதாகவும் இருந்தது, அதனால் அவற்றை நல்லவைகளாக்கவும், இனிப்பாக்கவும் கேரி விதைத்தார்.

அவரது இந்த சிறிய சின்ன இடத்தில் இவற்றை கேரி அவர்களால் அதிகமாக செய்ய முடிந்தது. முழு தேசத்தின் விளைச்சலையும் முன்னேற்ற கேரி விரும்பினார், அந்த காலங்களில் விளைச்சல் மிகவும் மோசமாக இருந்தது. நிலத்தின் மண், விவசாய உபகரணங்கள், உழுவதற்கு அவர்கள் பயன்படுத்திய முறைகளும் மோசமானதாக இருந்தது, இதன் மத்தியில் விவசாயிகள் தங்களது நில உரிமையாளர்களுக்கு அதிக பணம் வாடகையாக கொடுக்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தனர்.

இந்திய வேளாண் சங்கம் அமைப்பதே இதற்கான தீர்வு என்று கேரி சிந்தித்து, அதற்கான கூடுகையை ஆயத்தப்படுத்தினார், மிஷெனெரிகள் போக மூன்றுபேர் மட்டுமே அதில் கலந்துகொண்டனர். அனால் அதனை தொடர்ந்தார், இரண்டு மாதத்திற்கு பின்பு ஐம்பதுபேர் அதில் இணைந்தனர், அவர்களில் சிலர் பணக்கார இந்தியர்களாவார்கள், கவர்னர் லார்ட். கேஸ்டிங்ஸ் தலைமை தாங்கினார். இந்த சங்கமானது

இன்றும் செயல்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்திய வேளாண்மையை முன்னேற்றுவதற்காக செயல்படுகிறது.

இதே நேரத்தில் கேரி செராம்பூரில் இருந்த தனது காகித ஆலைக்கு முதல் நீராவி இயந்திரத்தை அறிமுகப்படுத்தினார். அருகிலிருந்தும் மற்றும் தூரத்திலிருந்தும் அநேகர் இந்த நீராவி இயந்திரத்தைப் பார்க்க வந்தனர். இந்தியர் இந்த இயந்திரத்திற்கு “தீ இயந்திரம்” என பெயரிட்டனர். அநேகர் இதனை “பிசாசின் தீ குழந்தை” என்று நினைத்தனர்.

கேரி தனது வயதான காலத்தில் தோட்டத்தில் முன்போல் வழக்கமாக நடப்பதைப் போன்று நடக்கமுடியாமல் போனபோது, தனது நாற்காலியை ஒரு சமதளத்தில் நிலையாக நிறுத்தி அவர் விரும்புகிற திசையில் அதனை கொண்டு செல்வதற்கு வசதியாக அமைத்துக்கொண்டார்.

இந்த நேரத்தில் தோட்ட பணிகள் கேரி பயிற்சி கொடுத்திருந்த தோட்ட பணியாளர்களால் செய்யப்பட்டது வங்காள மொழி பேசும் வலிமை பெற்றிருந்த இந்த பணியாளர்கள் தற்போது இந்த செடிகளின் லத்தின் பெயர்களை கற்றுக்கொண்டு, கேரி உச்சரிப்பது போலவே உச்சரித்தனர்.

கடைசியாக கேரி நாற்காலியில் வெளியே செல்ல முடியாத அளவுக்கு பெலவீனப்பட்டார், அப்பொழுது தலைமை பணியாளரை அழைத்து செடிகளைப்பற்றி அறிந்துகொள்வார்.

அவரது பெலவீனத்திலும் கேரி சுறுசுறுப்பானவராக காணப்பட்டார். லார்ட். கேஸ்டிங்ஸ் அவரை “சுறுசுறுப்பான வயோதிபர்” என்று அழைப்பார். ஒரே ஒரு முறை கேரி கவலையுடன் இருந்தார், மார்ஸ்மேன் அவரிடம் அதற்கான காரணத்தைக் கேட்டபொழுது, “எனக்கு பின்பதாக மார்ஸ்மேன் மாடுகளை என் தோட்டத்திற்குள் உள்ளே விட்டு விடுவார்” என்றார்.

சகோதரர் மார்ஸ்மேன் மாடுகளை தடுப்பதுமட்டுமல்லாமல், தோட்டத்தை பாதுகாத்து பராமரிப்பதாகவும் வாக்களித்தார். அதன் பின்பு கேரி மரித்துவிட்டார்.

மறு நாள் காலையில் ஊழிய ஸ்தாபனத்தின் கல்லறை தோட்டத்தில் அவர் அடக்கம் பண்ணப்பட்டார். அடக்க ஊர்வலத்தில் அவரது மிஷெனெரி சகோதரர்கள், இந்திய கிறிஸ்தவர்கள், ஆண்கள், பெண்கள், டேனிஸ் கவர்னர், மற்றும் அவரது மனைவி, கல்கத்தாவின் அரசு பிரதிநிதிகள் பின்சென்றனர். மெதுவாக சென்றுகொண்டிருந்த ஊர்வலத்தின் இரு கரையிலும் இந்தியர்கள், இந்துக்கள், முகமதியர்கள் கூட்டமாக அணிவகுத்திருந்தனர். டேனிஸ் கொடி பாதி கம்பத்தில் பறந்தது.

அவரது உயிலில் கல்லூரி அருங்காட்சியகத்திற்கு தாதுக்கள், சிப்பிகள், பவளப்பாறைகள், பூச்சிகள், மற்ற இயற்கை ஆச்சரியங்கள், அரிய வேத புஸ்தகங்களை விட்டு சென்றிருந்தார்..

அவர் போர்ட் வில்லியம்ஸ் கல்லூரியில் தனது பணிக்காக அரசிடம் இருந்து £45,000 பெற்றுக்கொண்டிருந்தாலும், கேரி தனது பணத்தையெல்லாம் ஊழியத்திற்காகவே பயன்படுத்தினார். அவரது புஸ்தகத்தை விற்று அவரது ஒரு மகனுக்கு £187 10s. கொடுக்கவேண்டிய நிலமையிலேயே ஏழையாக கேரி மரித்தார். இந்திய செய்தி தாள்களில் அவர் புகழ் ஒளித்தது, எல்லாரும் அவரை நேசித்து, கனம் செய்தனர்.

கேரியின் தரம் அவரது வாழ்வுதான், மண்வெட்டி என்று சொல்லப்படுவதைத் தவிர அவர் எந்த அதிகாரத்தையும் காட்டவில்லை. சில மனிதர்களின் வாழ்வு எளிதானதாகத் தோன்றலாம், நாம் அவர்களை பிறப்பிலேயே கவிஞர்கள், வர்ணம் தீட்டுபவர்கள், இசைக்கலைஞர்கள், என்பவர்களாக கூறுவோம். அவர்கள் நமக்கு பயன்பட்டிருக்கமாட்டார்கள் ஏனென்றால் நாம் அப்படி பிறக்கவில்லை.

கேரிக்கு ஒன்றும் எளிதாகக் கிடைக்கவில்லை. பல வருடங்கள் கடின உழைப்பிற்கு பின்புதான் மொழிகளைக் கற்றுக்கொண்டார். அவர் அனைத்தையும் கடின  உழைப்பிற்கு பின்பே செய்து முடித்தார்.

கேரி, தான் அன்புகூர்ந்து, சேவித்த, தேவனாகிய மீட்பருக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட தனது வாழ்வின் கடின உழைப்பால் என்ன சாதித்தார் என்பதின் பதிவுகள் நம் அனைவருக்கும் ஒரு சிறந்த உதாரணமாக இருக்கிறது.

Edited by Stephen Ross for WholesomeWords.org from William Carey by Percy Jones. London and Edinburgh: Marshall, Morgan & Scott, [n.d.]

William Carey Information

about | contact us | terms of use | store

Copyright © 2018 • Wholesome Words • All Rights Reserved

"...to the glory of God." • since 1996